[illegible]

V3 · N10'29 29 July 1930

JL
[illegible]211, N28K.N
N30·3·29
189113

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ௵ ஜூலை ௴ 24௳ [No. 29.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 561
2. தேவாரமும் வானநூலும்
E. T. சொக்கம்மாள் B. A., L. T. 563
3. மாதவி மாதவம்—பொ. இராமானுஜன் 565
4. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப்படலம்) 568
5. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B L. 570
6. தானே நிறைந்த தனிநெஞ்சம்
K. நாராயண ரெட்டிகாரு 573
7. நம்மாழ்வார் வைபவம் (1ம் பத்து—8ம் தசகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 575
8 கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B. A , B. L. 576
9. வர்த்தமானம் 579

2- SEP 1930
189113

## கலாநிலயம்

### சகுனியின் மரபுதான் சாய்வ தில்லையோ!

வண்டிமாடும் மாட்டுவண்டியும் வழிவழி மாறிமாறி வாராமலொழியட்டும். இந்தச் சிறு தந்திரமும் எந்திரமுமே வாழ்க்கையின் நோக்கம்போல் விளம்புவார்தம் வாய்பார்த்து உழல்கின்ற பேதைமக்களின் கதியை நினைத்துப் பரிந்து உருகுவார் பலபெரியோர். மேன்மேல் நிமிர்ந்துயர்தரவேண்டிய நமது ஆன்மஆசையை யறவேயகற்றிக் கீழ்கீ ழாழ்த்து மற்ப முயற்சிகளைத் தழுவிக்கொளல் ஆண்மையன்று, அழகன்று, அறனன்று, உண்மையை உரைக்குங்கால் விழைந்த அவ்வற்ப இலாபத்தைத்தான் தரவல்லதோவெனின் அதுவுமன்று. ஆதலின், உயர்தரத்துணர்வினோர்தம் நோக்கத்திற்கிலக்கா யிருக்கவல்ல பெருமைவாய்ந்த விடயங்கள் வேறாகும். சிந்தித்த மனமெல்லாம் தித்திக்கும் கருத்துக்களால் தாமுந்திகழ்ந்து மற்றவர்களையுந் திகழ்விப்பா ரவர். அன்னவர்களில் ஆங்கில நூலாசிரியர் ஜார்ஜ் எலியட் (George Eliot), என்பவர் ஒருவர். மதிநலம் வாய்ந்த இம்மாதின் ஆங்கிலச் சொற்களைக்கொண்டே அவர் கருத்தை உணர்வது சிறப்புடையதாகையால், அதனை ஈண்டு வரைவோம். ஆங்கிலப்பயிற்சி யுடையவர்களிலும் மிகச் சிலரே இப்பாடலை முன் கண்டிருப்பர்:—

O may I join the choir invisible
Of those immortal dead who live again
In minds made better by their presence:
In pulses stirred to generosity, [live
In deeds of daring rectitude, in scorn
For miserable aims that end with self,
In thoughts sublime that pierce the night [like stars,
And with their mild persistence urge [man's search
To vaster issues.
So to live is heaven:
To make undying music in the world,
Breathing as beauteous order that [controls
With growing sway the growing life of [man.
So we inherit that sweet purity
For which we struggled, failed, and, [agonized
With widening retrospect that bred des- [pair.
Rebellious flesh that would notbe subdued
A vicious parent shaming still its child
Poor anxious penitence, is quickdissolved;
Its discords, quenched by meeting har- [monies,
Die in the large and charitable air.
And all our rarer, better, truer self,
That sobbed religiously in yearning song,
That watched to ease the burthen of the [world,
Laboriously tracing what must be,
And what may yet be better, saw within
A worthier image for the sanctuary,

And shaped it forth before the multitude
Divinely human, raising worship so
To higher reverence moremixed with love
That better self shall live till humanTime
Shall fold its eyelids, and the human sky
Be gathered like a scroll within the tomb
Unread for ever.
This is life to come,
Which martyred men have made more [glorious
For us who strive to follow. May I reach
That purest heaven, be to other souls
The cup of strength in some great agony,
Enkindle generous ardour, feed pure [love,
Beget the smiles that have no cruelty—
Be the sweet presence of a good diffused,
And in diffusion ever more intense.
So shall I join the choir invisible
Whose music is the gladness of theworld.

உணர்வெலா மொருமுகப்படுத்தித் தன் உள்ளக் கிடக்கையை வழங்கியுள இப்பாடலின் நயமுழுதும் தோன்றுமாறு தமிழில் மொழிபெயர்த்த லருமையெனினும் அஃதிங் கின்றியமையாததால் ஒரு வண்ணம் முயல்வோம். பெறலரும் பேறாகப் பாராட்டித் தான் அடைதற் கவாவுவது எதுவென ஜார்ஜ் எலியட் மனமுருக வுரைக்கின்றார். இதுதான், மண் பொன் பெண்ணென்னும் வீணாசைகளுக்கு மாறாய ஆன்ம ஆசையென்று முன்னர்க் குறிக்கப்பெற்றது. இன்னதோர் மேன்மைவாய்ந்த எண்ணங்கள் எவர் மனத்தில் சிறிதேனு மெழுகின்றனவோ அவரே பெரியவர். மற்றவர் மனத்தின்கண்ணும் இத்தகைய எண்ணங்கள் உதித்து ஒளிருமாறு உதவுகின்றாராதலின், மக்கள்பால் உள்ளன்பும் மெய்ந்நட்பும் உடையவர்களும் அவர்களே. இதற்கு எதிரானவழியில் உய்க்க முயல்வதெல்லாம் மாறுபாடு துரோகமே அல்லாமல் வேறன்று. கண்ணிலான் பெற்றமைந்தன் சுயோதனனுக் கருகிருந்து சூழ்வினைகள் கற்பித்த சகுனிமாமனையே ஒப்பார்க்குக் காதமொன்று விலகினுலு மது போதுமோ தான்! சகுனிகிடக்க, நம் புலமைசால் மாதராள் ஜார்ஜ் எலியட், உள்ளங் கவர்ந்தெழு மூக்கமொடு வேண்டுவது ஒன்றே; அது வருமாறு. மொழிக்கு மொழி நேர்நேர் பெயர்க்காமல் அவர் கருத்தினைச் சிறிது விரித்துரைப்போம்:—

மாண்டா ரேனும் மாய்விலரென்ன என்றென்றுந் தோன்றுநிற்கும் உத்தமர் சிற்சிலர். அன்னவர், தம்மை நினைத்தவளவில் செம்மையை யெய்தும் மனத்தினிடத்தும், ஈகைக் கவாவி வேகமொடு துடிக்கும் நாடிக்குள்ளும், அஞ்சாச் சீலத் தருஞ்செய லகவையும், தன்னொடு முடியும் புன்மைக்கருத்தை இகழ்ந்து துரத்தும் வெறுப்பின்கண்ணும், இருள்சேர் பொழுதில் உருவிப் பாயும் விண்ணின் மீனன எண்ணங்களிலும் மீண்டும் மீண்டும் வந்து வைகுகின்றனராதலின் இறந்தகாரணத்தால் கழிந்தவருமாயினர் என்று அவர்தமை மதிக்கவொண்ணுமோ! இருந்தேஅவர்தாம் இடையின்றகலாது மெல்லென மெல்லென வற்புறுத்திக் "குறுகிய நோக்கங்கள் கடாதொழிந்து அகன்ற பொருள்களை நாடிப்படிவீர் நீரென" மனிதரை ஆற்றுப்படுத்தும் அருமையோர் ஆகின்றார் தொழுதகை மேலோர். அவ் விசைகெழுகுழுவினில் யானும்சேர்ந்து இருக்கப் பெறுவேனே என்றே வெஃகுமென் னுள்ளம்.

இன்னபடி இருக்குமொருமேலுலகவாழ்க்கையெய்தி, மனிதவயது முதிரமுதிரத் தன் ஆணையையு மதிகமாக்கி ஆள்கின்ற அழகுடைய வரன்முறையொழுங் கென்னும் வடிவத்தால் உலகத்தில் ஓயாத இசையுயிர்க்கும் பெற்றியளாகேனே! ஆயின், நாம் வருந்திமுயன்றும் தவறிவிட்டும், எய்தவியலாது பின்னோக்கிக் கையற்றுமனமுளைந்த அவ் வினியதூய்மையின் உரிமை வாய்த்தவராவோம். துன்மார்க்கத் தந்தை தன்மகனை எப்பொழுதும் அவமானப்படுத்திக் கொண்டிருப்பது போல், யாக்கையின் புல்லொழுக்கத்தால் பிறந்து கவல்கின்ற அந்த ஏசறவு என்னும் ஏழை விரைவினில் கரைந்து மறைகின்றது. ஆயினும், ஊனும் உணர்வும் இணங்கிச் சந்திக்கச்சந்திக்க, அந்த இகலானது கருணையெனும் பரந்தகன்ற காற்றினில் கலந்து மாயலாம். பிறகு, (ஆன்மா யாக்கை என ஒவ்வொருவருக்கும் அமைந்திருக்கின்ற இரண்டு கூறுகளில்) அருமையும் நன்மையும் உண்மையும் வாய்ந்ததாய், நற்கதிநாடிப் பத்தியொடு விம்மிவிம்மி மாழ்கியதும், பாரம்நீங்கி இளைப்பாறும்பரிசு யாதெனக் காத்திருந்ததும், இந்நிலையிலும் நன்னிலை யாதுயாதெனத் தாளாண்மையுடன்தொடர்ந்துவந்ததுமான நம் உயர்வுடைய நற்கூறு, தன் உள்ளக் கோயிலிற்கோர் சிறப்புடைய உருவத்தை அகத்திற் கண்டது. கண்டு, ஜனங்களுக்கு எதிரில், தெய்வத்தன்மையுடைய மானுடத் தோற்றமாய்அதனை அமைத்து, அன்பொடுகலந்த ஆராதனையைப் புரியும் வகை ஏற்படுத்தியது. அந்தச் சிறந்த பாகமானது, காலமே கண்சாய்ந்து, நாமறிந்த ஆகாயம் முடங்கலென மடங்கிப் புதையும் வரையில், அழியாது வாழ்வதாகும்.

வருவதற் கிருக்கும் வாழ்வு இதுவே. இதனை எய்தமுயன்ற முயற்சியில் தம்மையும் துறந்த பெரியோர், நாமும் அவர்களைப் பின்பற்றியொழுகும்படி இவ்வாழ்வின்வைபவத்தை விளங்கவைத்திருக்கின்றனர். நானும் அத்தூயதாம் மேலுலகத்தை அடையும் பாக்கியம் உடையவளாவேனே! அடைந்து, பிற ஆன்மாக்களுக்கு நல்லொழுக்கத்தில் நிலைநிற்கும் வல்லமையை அளிக்கக் கூடியவளாதல் வேண்டும். அருளிலே ஆர்வமும் அன்பிலே தூய்மையும் குரூரமின்றி மலர்கின்ற முறுவலையும் விளக்கவேண்டும். நன்மையே எங்கெங்கும் விரிக்கின்ற நிலையின ளாதல் வேண்டும். இன்னபடி நானும், உலகத்தின் உவகையே இசையெனப் பாடும் அத்தோன்றாத்துணைவராம் குழுவினர்களுள் ஒருத்தியாய்ச் சேர்ந்தவளாதலே வேண்டும்.

உலகத்திற் குதவவேண்டுமென்ற ஊக்கமுடையவர்களனைவரும் விழைந்து முயலவேண்டியது இதுவே. மனோவாக்குக் காயங்களின் தூய்மைக்கு உரியவராகவேண்டுமென்று வருந்திப் பயில்கின்ற ஜனங்களுக்குப் பக்கத்துணையாயிருந்து, அவர் யாக்கையை வென்றபோது அவ்வெற்றி சிறக்குமாறு ஊக்கமளித்தும், யாக்கைநசைக்குத் தோற்று உளையுங்காலத்தில், அவர் தளர்ந்தழியாமல் நல்லுரைகள் பேசி ஆறுதலளித்துத் தேற்றி மறுபோர்க்கு ஏற்ற மனத்திடமும் மற்றக் கருவிகளும் பயிற்றுவித்தும், வாழ்வாரே தாமும் வாழ்ந்தார், மற்றவர்களையும் வாழ்வித்தார். இஃதன்றி ஏனைய இலாபங்களை ஜனங்களுக்குச் செய்விக்க முயலும்வரையில் கேடுடைய சகுனியின்மரபு அற்றதில்லை என்பதொன்றே எஞ்சுகின்றது. "உன்னாலேயல்லவோ உலகத்தை ஆள்வது சகுனிமாமா" என்று பரிவுடன் பாராட்டி மகிழ்ந்த துரியோதனன் போனவழி தெரியாதோ!



# தேவாரமும் வானநூலும்

[555-வது பக்கத் தொடர்ச்சி]

## (iii) புறச்சான்றுகளும் வானநூல் காட்டும் அநுமானமும்.

குருபரம்பரைப் பிரபாவமென்னும் வைணவநூலில், பன்னிரண்டு ஆழ்வார்களும் கலியுக சகாப்தம் தொடங்கி இத்துணைவருடங்களுக்குப் பின்னர் இந்த ஆண்டு, இந்தத் திங்கள், இந்தக்கிழமை, இத்திதி, இந்நட்சத்திரம், இப்பட்சம் உதயாதி நாழிகைஇவ்வளவில் திருவவதரித்தனரெனக் குறிக்கப்பட்டிருக்கின்றது. தற்கால நாகரிக ஒழுங்கில் இக் காலவரையறையை விபரீதக்கணக்கெனெ வைணவ சிகாமணிகளாய் விளங்கும் சில தமிழ்ப்புலவர்களும் கூறஆரம்பித்து, இந்த அரசன்காலத்தில் இந்த ஆழ்வார் பாடினார், இவ்வரசன் இக்காலத்தினனென்று இந்துதேச சரித்திர ஆராய்ச்சியால் தெரிகின்றது, என்றென்றுதொன்றுதொட்டு உண்மைச்சரித்திரமென் றெண்ணலாய குருபரம்பரையைக் கவிழ்த்துவிட்டுங் கைத்தலமுப்பத்தனசொரிந்தனராய் அரிப்பரித்துப் பொருள்செய்யுமாறு நூதனஆராய்ச்சியால் முன்னோரை விபரீதக்காரரெனவும் மூடரெனவும் சித்தாந்தம் செய்துவிடுகின்றனர். நமதுநாட்டில் அரசர் பேரை நம்புவதென்றால், ஆற்றில் மண்குதிரையை நம்புவது போலாம். ஒரே பெயர்பெற்ற அரசர் நமதுநாட்டில் என்றும்பலருளர். கல்வெட்டுகள் அனைய ஆதாரங்களால் ஏற்படும் அரசபரம்பரை ஆராய்ச்சிக்காற்றில் பலபடி சுழன்றோடுகின்றது. அவ்வரச பரம்பரையை நம்பி நமது இலக்கிய மூலபுருஷர்களான குருபரம்பரையைக் கைவிடுவது உசிதமாகக் காணப்படவில்லையே. குருபரம்பரையில் பொய்மொழிகள் கற்பித்ததற்குக் காரணம்யாது கற்பித்தவர் யார் என்பதும், எவ்வெண்ணங்கொண்டு அத்தகைய பொய்மொழிகள் இன்றியமையாவென விபரீதக் கணக்குகள் கொடுத்தாரென்றும் கொஞ்சமும் விளங்கவில்லை. சகாப்தம் வருடம் மாதம் பட்சம் திதி நட்சத்திரம் முதலியனவெலாம் குறித்த ஓர்நாளில் ஒரு ஆழ்வார் திருவவதாரமாயினாரென்றால், அவ்வாறு அமைத்தநாள் பொய்யாயின் ஒன்றாக்கொன்று முரண் ஏற்படுகின்றதாவென்றும், சோதிட சாத்திரத்தின்படியே அத்தகைய நாளில் ஒரு மகாத்மா ஜனிக்கக்கூடுமா கூடாதா வென்றும் ஆராயாமலும், அக்கணக்கின்படி (இப்போது ஐகர்ஆலி முதலானோர் சாதகம்கணித்து அவர் சரித்திர வர்த்தமானங்களை ஆராய்வதுபோல்) ஆழ்வார்கள் ஜாதகம் கணித்து அவர் சரித்திரங்களைப் பரிசோதியாமலும், குருபரம்பரையில் அன்னோர் திருவவதாரங்களைப்பற்றிக் கூறியிருப்பது விபரீதக்கணக்கெனத் தள்ளிவிடுவது நம் சமயவளர்ச்சியிற் கண்ணோட்டமுடைய தமிழ்ப் பண்டிதமணிகளுக்குப் பொருந்துமோ!

குருபரம்பரைப் பிரபாவத்திற்கண்டுள்ள கணக்கின்படி திருமங்கையாழ்வார் காலம் இற்றைக்குச்சற்றேறக்குறைய 8000 வருடங்களுக்கு முற்பட்டதாகும். திருமங்கையாழ்வார் காலமும் சம்பந்தர்காலமும் ஒன்றென்பார் சிலர், சம்பந்தர் காலத்திற்கு ஒரு நூற்றாண்டு பின்னரென்பார் சிலர். எவ்வாறாயினும் மேற்கண்ட துருவநிலையின்படி கணக்கெடுப்பின் சம்பந்தர் காலத்திற்கும் குருபரம்பரையில் குறித்திருக்கின்ற திருமங்கையாழ்வார் காலத்திற்கும் அதிகதூரமிருப்பதாகத் தெரியவில்லை.

வைணவநூற்கள் நீங்கலாக வேறு சில புறச்சான்றுகளையும்இனி நோக்குவோம். நமது திருமுறைகளை ஆராயுமிடத்து, இக்காலத்தில் ஆரியப் பெயரால் வழங்கும் சில திருப்பதிகள் செந்தமிழ்ப் பெயரால் வழங்கியது விளங்கும். வேதாரண்யம், விருத்தாசலம், சுவேதாரண்யம், மாயூரம் (மாயவரம்), ஸ்ரீபர்வதம் முதலிய பதிகள், திருமறைக்காடு திருமுதுகுன்றம், திருவெண்காடு, திருமயிலாடுதுறை, திருப்பருப்பத மென்னும் தமிழ்நாமங்களைப் பெற்றிருந்தன. கோயில் என்றுமொழியப்பட்டதும் புலியூரென வழங்கியதும், இப்போது சிதம்பரம் என்றும் திருவேகம்பம், காஞ்சீபுரமென்றும் பெயர்மாறி வழங்குகின்றனவல்லவா? தமிழ்ப்பெயரை முற்றும் மறக்கடித்து ஆரியப்பெயரை வழக்கத்திற்கொண்டுவர நேர்ந்ததெனின், அது ஆரியர் தென்னிந்தியாவில் நிலைத்தபிறகென்றும், அதற்கு முன்னர்த் தமிழ்ப்பெயர் வழங்கியதென்றும் நாம் அநுமானிக்கலாமே.

பின்னுமொரு புறச்சான்றை நோக்குவோம். நமது சமயகுரவர்காலத்தில் தென்னிந்தியாவின் பல துறைமுகங்கள் நிறைந்திருந்தன. சேரநாட்டின்கண் திருவஞ்சைக்களம் முதல் குமரிவரையில் அக்காலத்தில் ஏற்பட்ட துறைமுகங்கள் இன்னுங் காணலாம். அவ்வாறே பாண்டிய சோழ தேசங்களிற் கடற்கரைத் துறைமுகப்பட்டணங்கள் பல புராதன அரச நாமங்களும் பெற்றிருக்கின்றனவல்லவோ? சோழமண்டலக் கரையில் திருவொற்றியூர், திருவான்மியூர், திருமயிலை, திருப்பாதிரிப்புலியூர், முதலிய திவ்ய ஸ்தலங்கள் ஒருவகையில் "தோணிரேவு"க்களா யிருந்தன. இவ்வளவு கடல்வணிகம் நடந்ததெனின், அக்காலத்திய நமது தமிழ்நாட்டைப்பற்றி மூவகை யனுமானம் நாம் கொள்ளலாகாதோ?

முதலாவது; வானநூலில் நமது தேசத்தார் பெருங் கல்வி பெற்று அதைக் கசடறவுணர்ந்திருந்தாரென்பது. இதற்கு அத்தாட்சியாக, நட்சத்திர உருவஇலக்கணங்களுக்குச் சூத்திரங்களும் அமைந்திருந்தன. இக்காலத்திலும் உள்நாட்டுக் கிராமவாசிகள் சிலர் வாய்பாடுபோல் கூறுவார் (உ-ம் "கேட்டை நான்கும் ஈட்டி போலாம்", "விசாக மேழும் இடிபாழ்ங்கிணறும்" என உருவமும் எண்ணும் அடங்கிய சூத்திரங்கள் இருபத்தேழு நட்சத்திரங்களுக்கும் உள.) மற்றுமொரு அத்தாட்சி:-நமது முன்னோர் தற்காலத்தில் நாம ஆங்கிலவழியிலறிந்த வெகுசூக்குமமான கணித சூழ்ச்சிகளையும் அறிந்திருந்தனர். மகத்துக்கு மகத்தான அளவைகளும் அணுவுக்கணுவான அளவைகளும் (தற்காலத்தில் Infinitesimal Calculus என்று நாம் கூறும் கணித சாஸ்திரத்தை)நம் முன்னோர் வேறுவகையில் அறிந்ததாக விளங்குகின்றது. இவ் வளவைகளுள்ள கணக்கைக் கீழ்க்கணக்கென்று மொழிவர்:—

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்

பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுது கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே — அப்பர்.

இரண்டாவது; கடலோடிப் பண்டமாற்றல் பழந் தமிழர் குடியேறியவுடன் இந்துதேசத்திற்கு அவசியமாயிருந்ததென்பது. சுவதேசத்தில் வேண்டுவன கிடைக்குமாயின் பரதேசங்களுக்கு நீர்மேற் சென்று வணிகம் செய்யல் நேராது. பரதேசங்களின் நாகரிகத்தில் மிக்க பொருள்கள் கிடைப்பினும் சரி, நமக்கு நித்தம் வேண்டும்பொருள் கிடைப்பினும் சரி, நம் பொருளுக்கு அதிகப் பொன் கிடைப்பினுஞ்சரி, தூர தேசக் கப்பல்யாத்திரைகள் நடந்திருக்கலாமே யன்றித் தற்காலம்போல் அற்பப் பயன்கருதிக் கப்பல் வணிகம் அக்காலத்தில் நடந்திராது. வேண்டுவன உள்ளூரிற் கிடைக்காத காரணமே அயலூருக்குச் செல்லும் உவகையின் தூண்டுகோலாம். வேண்டாமையெவ்வளவு அதிகரிக்குமோ, வியாபாரம் அவ்வளவு குறைவதுடன் தூரதேசப் பயணமென்பது முற்றும் அற்றுவிடும். ஆதலால் கடலோடு வணிகம் சிறந்ததெனக்கொண்ட காலையில் நமது தமிழ்நாட்டில் விளைவு குறைவென்றே யெண்ணல் வேண்டும். அதற்குத்தக்கவாறு தேவாரத்தின் சிலஇடங்களில் விவசாயக் கொள்கைகளைப்பற்றிய நூதன அபிப்பிராயங்களைக் காணலாம். நிலவளத்தைப் பரிட்சித்தவர்போல் திருநாவுக்கரசுநாயனார் பின்வரும்பாசுரத்தில் பாடுவதைக் காண்க:—

விட்டு வெள்ளம் விரிந்தெழு காவிரி
இட்ட நீட வயலே விளைவயல்
கொட்ட மாமுழ வோங்கும் குரக்குக்கா
இட்ட மாவிருப் பார்க்கிட ரில்லையே.

மூன்றாவது:-பயிர்த்தொழில் வளரவளர உள்நாட்டில் தமிழ்மக்கள் சேரவே வெளிநாட்டுக் கடல் பிரயாணம் பெரும்பாலும் குறைய வாரம்பித்தது, என்பதே. பரதேச வாசிகள் இந்தியாவுக்குக் கப்பல் மார்க்கமாய் வந்து நமதூரில் பண்டமாற்றல் செய்ய வாரம்பித்ததாலும், ஆரியக்கொள்கைகளாலும், கடல் மார்க்கம் செல்வோர் குலபிரஷ்டராவரென்னும் கொள்கைகள் தமிழ்நாட்டிலேறவேற, வங்கத்திலேறிச்செல்வது குறைந்தது. அப்பர் சம்பந்தர் காலத்தினில் சிவஸ்தலங்களிற் சிலவே நிலவளம் நீர்வளம் அமைந்திருக்கக் காண்கின்றோம். அவை பெரும்பாலும் காவேரி முதலிய ஜீவநதிகள் ஓரத்திலுள்ள ஊர்களாம். மற்ற க்ஷேத்திரங்களை அவர் பாடும்போது மருதச்சிறப்புக் காணப்படவில்லை. சுந்தரர் காலத்திலும் வெள்ளம் பாயும் ஆறுகளை அணையிட்டு ஏரிகள் முதலிய நீர்நிலைகளில் மடக்கிப்பயன்செய்யாது சலத்தைச் சமுத்திரத்திற்கு விட்டுவிட்டதாகவே காணப்படுகின்றது.

ஆகையால் நமது சமயகுரவர்காலம், குருபரம்பரைப் பிரபாவமென்னும் வைண நூலார் கணக்கின்படியே நோக்கினும் அது, வானநூலால் அநுமானிக்க வேண்டுவதான மூன்று துருவக்கழிவுக் கணக்கைத் தருமாதலானும், மருதநிலத்திற்கு விசேட கவனம் தாராது நம்மவர் ஐந்திணைகளையும் பேதம் அதிகமின்றி நோக்குவதாலும், நெய்தலே நம் சமயகுரவர் காலத்தில் அவாவுடன் நோக்கப்படுவதாலும், அத்தகைய செய்கை ஆரியக்கொள்கைகளுக்கு அந்நியோன்யமின்மையாலும், ஆரிய நாகரிகம் தமிழகத்தில் நிலைக்குமுன்னர் நமது சமயகுரவர்கள் பாடிய காலமெனப் பலவகைத் தோற்றங்கள் காணப்படுகின்றனவன்றோ? இனி, பின்னும் ஐரோப்பியகண்டத்தின் புராதீன நூல்களில் யாதேனும் நமது நாட்டு வர்த்தமானங்களுக்கு ஒப்பிடக்கூடுமோ வென்பதை ஆராய்வோம்.

### (vi) கீரீக்கர் காவியங்களும் ககோள சம்பவங்களும்.

அப்பர் சம்பந்தர் காலத்தில் வானந் துளங்கவைக்கும் எரிநட்சத்திர வீழ்ச்சி மிகவும் சாதாரணமாயிருந்ததாகத் தேவாரச் சொற்றொடர்களாலனுமானிக்கலாம். எரி நட்சத்திரங்கள் (meteors, என்று ஆங்கிலத்திற் கூறப்படுவன) பெரும்பாலும் வானத்தில் எரிந்து விழும் சிறு பூமிகள். நமது பூதேவியின் ஆகர்ஷண சக்தியால் வானத்தில் சுயேச்சையாய் உலவும் இப்பூமிகள் தாக்கப்பட்டவுடன், தாம் போகும் பாதை தப்பி நமது பூமியைநோக்கி வெகு வேகமாய் விழுந்துவிட நேர்வதால் உஷ்ணம் மிகவும் அதிகமாய் நெருப்புத்தன்மை பெற்று வாயுமண்டலம் வந்தவுடன் எரிந்து சாம்பலாய்விடும். அவ்வாறுசாம்பலாகாமல் பெரும்பாறைகளாய்ப் பூமியில் விழுவதும் உண்டு. அக்கற்களை நமது (museum) அறிவியற் காட்சிச்சாலைகளிற் காணலாம். இக்காலத்தில் எரிநட்சத்திர வீழ்ச்சி வருஷத்திற்கு மும்முறை * மலியக் காண்போமாயினும் இத்தகைய நெருப்புக்கல்வீழ்ச்சி மிகவும் குறைவே. அப்பர்காலத்தில் இது சாதாரணமாகும். அக்கிரமம் செய்தவன் தலையில் இடிவிழுமென்பர். சம்பந்தரை மறுத்துப்பழித்த ¶ புத்தநந்தியின் தலையில், சம்பந்தர்தம் அடியார்களில் ஒருவர் "அஸ்திரமாவது அஞ்செழுத்துமே" என்பதைப் பாடியமாத்திரத்தில் இக்கற்களில் ஒன்று வானத்தினின்று வீழ்ந்து அவனழிந்தானென்று நாம் சம்பந்தர் சரித்திரத்தா லறிகின்றோம். இவ்வாறு நெருப்புக்கல், பூமியில் அக்கிரமம்செய்யும் மனிதர்மீது திடீரென்று விழுந்து அவரை யழித்துத் தொலைப்பது கி. மு. 10 அல்லது 12 நூற்றாண்டுகளுக்கு முன்னர், கிரீஸ் டிராய் முதலியமாகாணங்களில் சகஜமாயிருந்ததாகக் கிரீக்கர் புராணங்களாகிய இலியட், ஒடிஸ்ஸீ என்பனவற்றிலும், ரோமர் முதனூலாகிய இனியட் என்னும் காவியத்திலும் மற்றுமுள்ள கிரேக்கர் சரித்திரங்களிலும் காண்கின்றோம். ஸீயஸ் (Zeus) என்னும் முதற்கடவுள் கையில் இடிக்கட்டிகளை வைத்துக்கொண்டு விண்ணிலிருந்து மண்ணில் மறஞ்செய்யும் மாந்தர்மீது விட்டெறிவதாய்க் காணப்படும் இக்கதைகளைப் புராணக் கட்டுகதைகளெனத் தள்ளிவிடினும், நெருப்புக்கற்களின் வீழ்ச்சி, அக்காவிய காலங்களுக்குமுன்னர் என்பது அநுமானிக்கலாம்.

*ஆகஸ்டுமாதம் 9-ந்தேதி முதல் 11-ந்தேதிவரையிலும், நவம்பர்மாதம் 12தேதி முதல் 14தேதி வரையிலும், நவம்பர் ௴ 27தேதி முதல் 29தேதி வரையிலும், மும்மூன்று நாட்கள் ஒவ்வொரு வருடத்திலும் எரிநட்சத்திரங்களின் வீழ்ச்சியை இரவில் காணலாம்.

¶ "நந்தி" யென்பது குருவென்னும் பொருளுடையது. சமணரிலும் "கனகநந்தி" முதலானோர் குருக்கள். சைவத்தில் நமது நந்தியம் பெருமான் நமக்கு முதலாசிரியராகும். சைவத்தில் நந்தியென்பது குரு, ஆசாரியன் என்னும் பொருள் தந்ததால் அப்பதத்தை ஏனைய சமயத்தோரும் அப்பொருள் குறிக்கப் பயன்படுத்தினர்.



இக்காலமும், துருவநிலையால் கணிக்கும் சம்பந்தர் காலமும் சற்றேறக்குறைய ஒருகாலமாய்க் காணப்படுகின்றன.

முடிவுரை: தமிழில் நமது இலக்கியநூலாசிரியர்களது காலவரையறையை ஆராய்ச்சி செய்தவர்கள் முதல் முதல் கிரிஸ்தவப்பாதிரிமார்கள். அவர்கள் ஆராய்ச்சி, வேண்டுமென்றே ஒருதலை யாராய்ச்சியா யிருந்தது. எல்லாக்கலைகளும் நீதிகளும் ஒழுங்குகளும் தத்துவ விளக்கங்களும் பைபில் என்னும் தமது வேதத்தினின்று வந்தனவெனவும், கிரிஸ்தவப்பாதிரிகள் இந்தியாவில் வந்து தமது சமயத்தைப் போதித்தபின்னரே திருவள்ளுவப்பயன் முதலிய நூல்கள் வெளியாயினவென்றும் வெகுஉன்னதமானகற்பிதங்கள் செய்யலானார். அக்கற்பிதங்களை நிலைநிறுத்துவதற்குத் தக்கவாறு அன்னோர் இலக்கியஆராய்ச்சியும் பின்தொடர்ந்தது. நமது முன்னோர்வழி நடந்தோர்மாத்திரம் நமது திருமுறைகள் பல்லாயிர வருடங்களுக்கு முற்பட்டதெனக் கர்ணபரம்பரையாய்க் கூறினரன்றி அறிவியல் நூல்நடையாய் வாதிக்கவில்லை. ஆங்கிலம் கற்றுத் தமிழிலும் வல்லவராயிருந்த சில தமிழறிஞர், இப்பாதிரிமார்களின் கற்பிதக் கணக்கை முற்றிலும் கண்டித்தெறியாமல், முன்னோர் கூற்றையும் ஏற்காமல், சமாதானவழியில் சென்று கடைச்சங்கத்தைக் கி. மு இறுதியிலும், அப்பர் சம்பந்தர்களை 5, 6 நூற்றாண்டுக்குப் பிறகும் காலவரையறை குறித்தனர். பிறகு வாதாபி கல்வெட்டு வருடமும் கொடுத்து விட்டது.]

முற்றிற்று.

# மாதவி மாதவம்

[545-வது பக்கத் தொடர்ச்சி.]

## 5. யாழ்க்கருவி இடைநின்று ஊழ்வினையை உறுவித்தமை.

கொடுங்கண் வலையாலுயிர் கொல்வா னுந்தை
நெடுங்கண் வலையாலுயிர் கொல்வை மன்னீயும்
வடங்கொண் முலையான் மழைமின்னுப் போல
நுடங்கி யுகுமென் னுசுப்பிழுவல கண்டாய்.

[உன் தந்தை வலைந்த கண்களையுடைய வலையால் உயிர்களைக் கொன்று திரிகின்றான்; நீயும் அம்மரபிற்கேற்ப உனது நெடிய கண்ணாகிய வலையால் எனதுயிரைக் கொல்கின்றாய்; ஆ! இப்பழி வாளா கழியுமென நினையாதே; முத்தாரம் பூண்ட உனது வளர்ந்த முலைகளே சுமையாய் நின்று உன்னுடைய மெல்லிய இடையை முறித்துவிடும்; ஆதலின் எளியனைக் கொல்லாது அருளுவையாயின் உனது தனபாரத்தை யென் தோளிற்சுமந்து உன் இடையைக் காப்பேன்]

இது புணர்ச்சிநீட இடந்தலைப்பாட்டிற் புணர்தலுறுவான் ஆற்றாமைகூறியது. தன்னை யிடரில் ஆழ்த்திய அவ்வணங்கிற்குத் தானும் ஓர் இடர் கற்பித்து, 'எனது துயரைக் களையின் யானும் உனது துயரைக் களைவேன்' என்னும் இவன் கூற்று நம்மனோர்க்கு வியப்புமிகினும் மாதவிக்குப் பெரிதும் துன்பமே பயந்திருக்கும். "புகையும் சாந்தும் புலராது சிறந்து, நகையாடு ஆயத்து நன்மொழி திளைத்து" என முன்னர் இளங்கோவடிகள் மொழிந்தமையன்றி, இவனே பின்னர் ஓர்பொழுது "வறுமொழியாளரொடு வம்பப் பரத்தரொடு, குறுமொழிக் கோட்டி" எனக் கூறியுள்ளானாகலின் இவன் எங்ஙனம் இத்துணைச் சொல்வன்மை பெற்றானென்பதை நாம் நெடிது ஆராய்தல் வேண்டா!

புன்னை நீழற் புலவுத் திரைவாய்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றம் கூற்றம்.

[புலவுநாறும் அலைபரந்த கடற்கரையின் புன்னைமா நீழலிலே, தன் நடையைக்கண்டு அன்னம் நடக்கும்படி நடப்பவளாகிய அவ்வணங்கின் செவ்விய கண்கள் கண்களல்ல; மிகக் கொடிய கூற்றம்!]

இது புணர்ந்துநீங்குவான் விடுத்த லருமையால் ஆற்றானாய்த் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. முன்னே "கண்ணால் உயிர் கொல்கின்றாய்" எனக் கூறியவன் இங்கு அத்திறத்தால் "அவைகள் கண்களல்ல, கூற்றமே" யென முடிவுகட்டுகின்றான். "தொடக்கத்தில் காவிரியை வாழ்த்துவதுபோலத் தன்னை (மாதவியை) விளித்து, நான் உன்னொடு மருவி வாழ்வதுபோலவே வேறொரு மாதொடுகூடி யான்விழைந்து வாழினும் நீ பிணங்கமாட்டாய்; பிணங்கலு முனைவாறு' எனப் பாயிரம் புனைந்தனனாய், 'ஆ! தேவகன்னியர் முதலாந் தெரிவையர் யாவரேயாயினும் என்கண், தனக்கு மைந்தராமாற்றும் சுந்தரியொருத்தி கண்டுறைவளென யானறிந்திருப்பின் கண்டடையேனே' என மற்றொரு மங்கையைத் தன் மனம் நாடிநிற்பதைக் குறிப்பாய்க் காட்டி; அன்னவள் திருமுகச் செவ்வியைப் பலபடப் புனைந்துரைத்துத் தன் ஆற்றாமை கூறி, எங்ஙனமாவது தன்னை (கோவலனை) யேற்றருளாவிடின் அதனால் வரும்பழிக் கேது அவளே யாதலின் அவளும் துன்பத்திற்காளாகக் கூடுமென்றும்" நிரலே கோவலன் பாவிற்குப் பொருள்கொண்ட மாதவி மனமாழ்கா தென்செய்வள்? "அவள் அங்ஙனம் பொருள் கொண்டமை முறையோ?" என வினவல் முறையன்று. அவள் அங்ஙனம் பொருள்கொள்ள நேர்ந்தமைக்கு ஏது முன்னரே குறித்துள்ளேன். "அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழும்" எனின், அம்மெல்லியலாரின் மனதின் மென்மைக்கு வேறு எடுத்துக்காட்டு யாதேனும் உளதோ? எனவே கோவலன் பாடியவை மாதவிமனதை வாட்டமுறச் செய்தனவெனின் நாம் வியப்புறுமாறிலை. எனினும் அதை வெளியிற் காட்டாது, மனமிக மகிழ்ந்தவள்போலத் தனதன்பன் கையிலிருந்த யாழைவாங்கித் தன் நெஞ்சில் எவ்வகை மாறும் இல்லையெனினும், அவன் வேறுகுறிப்புடையனாய்ப் பாடினமையின் தானும் வேறு குறிப்புடையவள் போலப் பாடத் தொடங்கினாள். அங்ஙனம் பாடத் தொடங்கினளே யன்றித் தன் காதலனை யல்லால் வே

றெவரையும் மனதில் நினைத்தவளல்லள்; அவன்மீது ஒரு சிறிதும் வெறுப்பு உற்றவளும் அல்லள். மற்று அவள்காதலன் பாடிய பாக்களினும் இவள் பாக்கள் நெஞ்சை மிகமிக வுருக்குவன. அவன் முதலில் காவிரி யாற்றைக் குறித்துப் பாடுவதுபோல நடித்து, வேறு குறிப்புத்தோன்ற மொழிந்ததொப்ப, இவளும் அவ் யாற்றைப் பாடுவதுபோல மறைமுகத்தால் இறையிறுக்கின்றாள்.

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி!
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்த தெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
யறிந்தேன் வாழி காவேரி!

[வாழி! காவேரி! நீ அங்கங்கேயுள்ள மலர்களைப் பறித்துவரலால் அவற்றினிடையே வண்டுகள் ஒலிப்ப, அவ்வழகிய பூக்களாகிய ஆடையை மேலேபோர்த்துக் கயலாகிய கரியகண்கள் பிறழ அசைந்து நடந்தாய்; இங்ஙனம் நீ நடந்ததெல்லாம் நின் கணவனாகிய சோழனுடைய செங்கோல் வளையாமையேயன்றோ? அதனை யான் அறிந்துள்ளேன்.]

மணிப்பூவாடைபோர்த்தற்குத் தன் கரையிருமருங்கும் நறுமலர்ப்பொழில் இருத்தல் வேண்டும். அங்ஙனம் மலர்ப்பொழில் வளர்ந்து செழித்தற்கும், கயல்கள் பிறழ்தற்கும் என்றும் இடையறா நீர்ப்பெருக்கு வேண்டும். அந் நீர்ப்பெருக்கிற்கு ஏது மன்னவன் கோல்கோடாமையே யென்பதை யிவ்வயின் மாதவி அழகுபடக் கூறுகிறாள். "கோணிலை திரிந்து கோடை நீடினும், தானிலை திரியாத்தண்டமிழ்ப்பாவை" யெனக் காவிரியாற்றைக் குறித்து ஆசிரியர் சாத்தனார் கூறியிருப்பது புகழுரையேயாகும். காவிரியாறு என்றும் இடையறா நீரோட்டமுடையதன்றி, பயிர்வளத்திற்கு வேண்டிய நீர்ப்பெருக்கு என்றும் அது உடையது அன்று. மழைபெய்யுங் காலத்தே பயிர்த்தொழிற்கு வேண்டிய நீர்ப்பெருக்குக் காண்கின்றோம். அதனால் அந் நீர்ப்பெருக்கிற்கு ஏதுவான மழைக்கு ஏது மன்னவன் கோல்கோடாமையே யாகும். எனவே, "காவேரி! உன் கணவன் உன்னையன்றி வேறு கங்கை முதலிய மங்கையரையும் தனக்கு உரிமையாய்ப்பெற்றிருப்பினும், அவன் யாவரிடத்தும் ஒத்த அன்பினனாகவே யிருத்தலினாலன்றோ நீ குன்றா எழிலும் பொன்றாவளனும் பெற்றுள்ளா யென்பதறிந்தேன்." எனக் கூறுமுகத்தான் மாதவி "காதல! நீ யென்னையன்றி வேறு எவரைவிழைந்திடினும் எளியேனென்மீதுள்ள அன்பு என்றும் மாறா திருக்கவேண்டும். இன்றெனின் மற்றென் இளமையும் வனப்பும் என்னாம்?" எனத் தன் அன்பனது முதற்பாவிற்கு அழகாக மறுமொழி விடுக்கின்றாள்.

அங்கே கோவலன் "சென்னி செங்கோலோச்சிக் கங்கையைப் புணர்ந்தாலும், காவிரி தன்னிலையிற் றவறாள்; அங்ஙனம் தவறாமை அவளுடைய குன்றா நிறையே யாகும்" எனக்கூற, அதற்கு மாதவி இங்கு "அன்ப! நீ கூறியது உண்மையே; எனின் அக் காவிரிப்பாவை தன் கொழுநனிடத்துச் சினங்காட்டாது உடனுறைதல் அவளுடைய பெருங்கற்பே யெனினும், அக் கற்பிற்கு ஏது அவள் கணவனுடைய செங்கோலே" எனக் குறிப்பித்து, "யான் பேதை; ஏது நேரினும் அதற்கு ஏது நீயே" எனப் பழியை அவன்மீது சுமத்தும் நேர்மையால் அழகிதன்றோ?

கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரியின்றி விளைவஃகிப் பசியு நீடிப்
பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பிழந் தறங்கண் மாறி
ஆணையிவ் வுலகு கேடாம் அரசுகோல் கோடின்

என்னும் தருமதத்தன் உரையும்;

மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றேனின் இன்றால்

என நெடுமுடிக் கிள்ளியின் வாய்வைத்து ஆசிரியர் சாத்தனார் கூறியுள்ளமையும் இங்குச் சிந்தித்தற்கு உரியன. இதுகொண்டு அன்பர்கள் மாதவியின் நிறையைக் குறைபட நினைத்தல் ஒண்ணாது.

வாழி யவன்றன் வளநாடு
மகவாய் வளர்க்குந் தாயாகி
ஊழி யுய்க்கும் பேருதவி
யொழியாய் வாழி காவேரி!
ஊழி யுய்க்கும் பேருதவி
யொழியா தொழுகல் உயிரோம்பும்
ஆழி யாள்வான் பகல்வெய்யோன்
அருளே வாழி காவேரி!

[காவேரி! உன் கொழுநனுடைய நாட்டை ஊழிக் காலமளவும் மகவாக வளர்க்குந் தாயாய் நின்று ஓம்பும் உன் ஒப்பற்ற மேன்மை நீயென்றும் ஒழியாய்; அங்ஙனம் நீ ஒழியாதொழுகல் உன் தலைவனது நடுவுநிலை திறம்பா அருளேயன்றோ? அப்பேறு பெற்றுள காவேரி, வாழ்வாயாக.]

கணவனுக்கு உரிமையான வொன்று மனைவிக்கும் உரியதே. மற்று, அதனைக் காத்தல் மனைவிக்குங் கடமையேயன்றி வியப்பொன்றுமின்றே. எனின்; உலகில் என்றும் மகவாயிருக்கும் ஒன்றிற்கு, மூத்து விளியுறாது என்றும் இளமையோடு மாறா அருள்சுரந் தூட்டும் அன்னையின் செய்கை யருமையே யன்றோ? அச் செயலருஞ் செய்கை அவள் ஆருயிர்த் தலைவன்தன் அருளேயென மொழிகின்றாள் மாதவி. முன்னர்க் காவிரிப்பாவையின் தலைவனை அவளுக்குக் கணவன் என அறிவித்தவள் ஈண்டு அவனை "ஆழியாள்வான் பகல் வெய்யோன்" என அறிவிப்பது நாம் உணர்ந்து அநுபவித்தற் குரியது. ஆற்றலில்லா ஒருவன் சீற்றத்தால் யாது புரிய வியலும்? அஃதேபோல் பொருளில்லா ஒருவனது அருளாலும் பயனொன்றுமில்லை. ஆதலின் "காவிரியின்கணவன் இருநில முழுதாளும் பெருமகன்; அங்ஙனம் மன்னர்மன்னனாகி யிருத்தல் மட்டும் அமையாது. அவன் ஆதித்தன் வழித்தோன்றல் - நடுவுநிலையை விரும்புவோன்" என அழகொழுகக் கூறும் மாதவி, கோவலனைப்போல் இறுமாப்பின்றிப் "பெரும்பொருள் பெற்றுள ஐய! யான் பூண்டுள்ள அணியும் உடையும் பிறவும் நீ தந்தவே; உமது பேரருளிலதெனின் எளியேன் இச் சீர்பெற இயலாது; ஆதலின் அளியள் மறந்தவறிழைத்திருப்பினும் ஏழைமீதுள்ள அன்பு என்றும் மாறாதிருக்க வேண்டுவல் "எனக் குறையிரக்குஞ் செவ்வி நம்நெஞ்சைக் கனிவிக்குந் தரத்ததன்றோ?



உண்டாரை வெல்நறா வூணொளியாப்
பாக்கத்துள் உறையொன்றின்றித்
தண்டாநோய் மாதர் தலைத்தருதி
யென்பதையாங் கறிகோமைய?
வண்டால் திரையழிப்பக் கையால்
மணல்முகந்து மதிமேனீண்ட
புண்டோய்வேல் நீர்மல்க மாதர்
கடல்தூர்க்கும் புகாரே யெம்மூர்.

[ஐய! தன்னை உண்டாரை அறிவுதிரித்துக் கடுமை செய்யும் நறவால் அவ்வுண்டவுணவை மறைக்கவியலாதார் உறையும் கடற்கரைப் பாக்கத்தின் சோலையிலே மருந்துஒன்றுமின்றிக் குறையாத காமநோயை இப்பெண்ணிடத்தே தந்திருக்கிறாயென்பதை யெங்ஙனம் அறிவோம்? எம் ஊரோ, கடற்கரை மணலிலே பெண்கள் கோலிய சிற்றில் முதலியவற்றை அலைகள் அழிப்ப, அதனால் மனம் வருந்திக் கண்ணீருகுத்து "எம் சிற்றிலை யழித்த இக்கடலை யாமும் அழிப்போம்" எனக் கையால் மணல்முகந்து கடல்தூர்க்கும் மாதர் வாழும் புகாரேயாகும்.]

கோவலன் காவிரியை வாழ்த்துவதாக நடித்து "வேறொரு நங்கையை யான் விரும்பி நிற்பினும் அதனால் என்னை நீ வெறுக்காதே" எனக் கூறியதாகப் பொருள்கொண்ட மாதவி, தானும் அதற்கேற்பக் காவிரியை வாழ்த்துவதாக நடித்துத் தனது அன்பனது முதற்பாவிற்கு அமைதிகூறிய பரிசு முன்னர்க் கண்டோம். இனி, அவன் "கானல்வரி" முதலாகப் பாடிய பாக்கள் வேறோர் மாதினை விழைந்துநின்றானெனத் தெள்ளத்தெளியக் கண்ட மாதவி தானும் அந்நெறி பற்ற முயல்வாள்போல் நடிக்கின்றாள். இவள் பாடுகின்ற பாக்கள் வெளிப்படையாகத் தன் காதலனையன்றி வேறொருவனைக் குறித்துக் கூறுவதாகத்தோன்றினும், குறிப்பாகத் தன் அன்பனைப்பற்றி மொழிவதாகவே புலப்படுஞ் செவ்வியை நிரலே காண்போம்.

"ஐய! எம் தலைவி கடலொடு மாறுகொண்டு அதனைத் தூர்க்கமுயலும் பேதைப்பெண்களின் ஊருறைவாள்! நீ ஊட்டிய நோயோ உன்னாலன்றி மற்றவரால் தீர்க்கவியலா நோய்! அந்நோய் தந்த இருப்பும், பிறரிடத்தே உரைக்கத் தகுவன இவை தகாதன இவை, என அறியாது வாய்க்குவந்தன வெல்லாம் பிதற்றித்திரியும் வெறியர் உறையும் கடற்கரைப்பாக்கம். இங்ஙனமாக நீ இவளை யின்றே மணவாவிடின் வரும் ஏதத்திற் கென்செய்வோம்?" எனக் குறையிரந்து தோழி கூறியதாகப் பாடிய மாதவி, "அன்ப! இக்கழிக்கானலிலே அளியளைவிடுத்து மற்றொருத்திமீது ஆர்வமுடையவராகக் காட்டி ஏழையேற் கூட்டிய நோய் உம்மாலன்றித் தீராதென்ப தறியீரோ? யானோ அறிவிலாப் பேதை', எனக் குறிப்புணர்த்தும் நேர்மையால் அவளது அரியகுணம் புலனாகின்றது.

புணர்துணையோ டாடும் பொறியலவ னோக்கி
யிணர்ததைபூங் கானல் என்னையும் நோக்கி
உணர்வொழியப் போன வொலிதிரை நீர்ச்சேர்ப்ப[ன்
வணர்சுரியைம் பாலோய் வண்ணம் உணரேனால்.

[வளைந்த சுருண்ட கூந்தலையுடைய தோழி! தளிர்கள் செறிந்த பூங்கானலிலே தனது துணையொடு கூடி விளையாடும் நண்டைப்பார்த்துப் பின்னர் என்னையும் பார்த்து, எனது நினைவு அழியச் சென்ற தலைவனது இயல்பை அறியேனே!]

எத்துணை அழகிய பா இது! "என்மீதுள்ள காதலை, துணையொடுகூடி மகிழும் நண்டையும் என்னையும் மாறிமாறிப்பார்த்தலாலே உணர்த்திப் பின் ஏழையேன் செயலற்று நிற்பப் பிரிந்த தலைவர் மீண்டும் வந்தென்னை யேற்றருள்வரோ?" எனத்தலைவி தன் உயிர்ப்பாங்கியிடத்துக் குறைநயந்ததாகப் பாடிய மாதவி, தன் காதலன் வேறொருத்திமீது நாட்டமுடையவனாகக் காட்டினமையின், "உண்மையாகவே ஒருக்கால் என்னைப் பிரிந்துசெல்வரோ? செல்லின், மீண்டும் வந்தென்னை முன்போல் மகிழ்ந்தேற்றுக் கொள்வரோ? அன்றி மறப்பரோ? அவரியல்பு அறியுமா றில்லையே" எனத் தன்னுடையவுட்கோளையும் புலப்படுத்துமுறையில் பாடியிருப்பது நம் நெஞ்சைக் கனிவித்து மிக்க விரக்கங்கொள்ளுமா றமைந்திருக்கின்றதன்றோ?

தம்முடைய தண்ணளியும் தாமும் தம்மான்றேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் னிணர அடம்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்.

[அழகிய மென்மைவாய்ந்த அடம்புகளே! அன்னப் புட்களே! தம்முடைய தண்ணளியும், தாமும், தம் புரவிபூட்டிய தேரும் எம்மை நினையாது விட்டார்; அங்ஙனம் அவர் எம்மை நினையாது செல்லின் செல்க; யாம் அவரை யென்றும் மறவேம்]

இது தலைவனைப் பிரிந்த தலைவி பெரிதும் நினைந்து இரங்கு முறையில் அமைந்துளது. "தண்ணளியும், தாமும், தேரும்" என ஏதோ கூறத்தொடங்கிய தலைவி வேட்கை மிகுதலாலே அதனை மறந்து "என்னை நினையா தொழிந்தனர்" என முடித்துவிட்டாள். "அவருடைய கருணையும், தேருந்தான் எம்பால் உறவிலாதன; அவை யகலினுமகலுக; மற்று அவரென்னை மறந்ததுதான் கொடுமை; எனினும், ஏழையேன் அவரை யென்றும் மறவேன்" எனக் கூறுந்திறத்தால், முன்னர் "அவர் என்னைப் பிரிந்துசெல்வரோ; செல்லின், மீண்டும் வந்தென்னை மகிழ்ந்தேற்றுக் கொள்வரோ, அன்றி மறந்துவிடுவாரோ" என்று ஐயுற்ற மாதவி ஈண்டு, "இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண—நன்னயஞ் செய்துவிடல்" என்னுந் தமிழ்மறைக் கியைய "அவர் அங்ஙனம் மறப்பினும் யான் என்றும் மறவேன்" எனத் தனது காதல் மிகுதியைப் புலப்படுத்துகின்றாள்.

புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தால் நீயெய்துங் கனவினுள்
வன்கண்ணார் கானல் வரக்கண் டறிதியோ?

[இனிய தேறலைப் பெற்றுள்ள ஆம்பலே! பிரிந்தார்க்குத் துன்பத்தை மிகுவிக்கும் மாலைப்பொழுதிலே வருந்துகின்ற எனது கண்களைப்போல நீ துன்பம் உழவாய்; நன்கு துயில்கின்றாய். அங்ஙனம் நீ துயில்கின்றபொழுது அடையுங் கனவினுள் என்னின் நீங்கி அளியளை முற்றிலும்மறந்த வன்கணாளரை மீண்டும் இக்கானலிடத்தே வரக்கண்டனையோ?]

தமக்கெதிரே தோற்றும் இயங்கியற்பொருள் நிலையியற்பொருள் முதலியவற்றை விளித்துத் தமது குறையை முறையிடல் பிரிந்துவருந்தும் காதலர்க்கு இயல்பு. அவை தம்மொடு உரையாடாது வாளாவிருப்பதற்கு அவற்றின் நீர்மையைப் பழித்து முறைப்

பார். மற்றிங்கு மாதவி தன் வினாவிற்கு மறுமொழி தரவியலாத நெய்தற்பூவை "இன்கள்வாய்" என்னும் அடைமொழியால் "நீ கள்ளுண்டு மயங்கினாய் போலும்! அதனாலன்றோ நீ எனக்கு மறுமொழி தந்திலை" எனப் பொருள்தருமாறு அமைத்திருப்பது சால அழகிது. முன்பு "அவர் என்னை மறப்பினும் யான் மறவேன்" என்று குறிப்பித்தவள் இங்குத் தான் அவரை மறவாமையைக் குறிக்கின்றாள்.

# தமிழ்ப் பாடம் 130.

[ 550-வது பக்கத் தொடர்ச்சி. ]

## நைடதம்—நளன் தூதுப் படலம்

கழைசுளி புகர்முகக் களிநல் யானையா
னிழைசுட ரெறிப்பவந் திறுத்த தேந்திழை
விழவினுக் காயின்யா மீண்டு போதலே
யழகிதென் றந்தக னறைந்திட் டானரோ. 11.

(உரை). "கழை-கரும்பை, சுளி-கோபித்து முறிப்பதும், புகர் முகம் - புள்ளிகளையுடைய முகத்தையுடையதும், களி - களிப்புடையதும் ஆகிய, நல் - நல்ல, யானையான்-யானையை உடைய இவன், இழை-தன்னுடைய ஆபரணங்கள், சுடர் எறிப்ப - ஒளி வீசும்படி, வந்து இறுத்தது - வந்து தங்கியது, ஏந்து இழை - நிமிர்ந்த ஆபரணங்களை அணிந்த தமயந்தியின், விழவினுக்கு ஆயின்-சுயம்வரவிழாவின் பொருட்டேயானால், யாம் - நாமனைவரும், மீண்டு போதலே அழகிது - திரும்பிப் போய்விடுவதே தகுதியாகும்," என்று - என்று, அந்தகன் - யமன், அறைந்திட்டான் - சொன்னான். (அரோ—அசை).

குறிப்பு:—கழைசுளி - இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் வல்லினமெய் மிகவில்லை. சுளிபுகர்-வினைத்தொகையாதலால் வலி மிகவில்லை. ஏந்திழை-வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. மீண்டு போதலே - நிலைமொழி வினையெச்சமாயினும் ஈற்றில் மென்றொடர்க்குற்றியலுகரம் இருத்தலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

---

போர்த்தொழில் வைரவாட் பொருவி லண்ணல்
தார்ப்பசுங் கிளியனு டார்பெ றாதுபோய்க் [செங்
கார்க்குழ லரம்பையர் கமல வாண்முகம்
பார்ப்பதெவ் வாறெனப் பரிவிற் கூறினான். 12.

(உரை). போர்த் தொழில் - போர்த் தொழிலிற் குரிய, வைரம்வாள் - வஜ்ராயுதத்தையுடைய, பொருவு இல் அண்ணல்-தனக்கு நிகரில்லாத சிறப்புவாய்ந்த இந்திரன், "செம் தார் - செம்மையான மாலையை அணிந்த, பசும் கிளி அனாள் - பச்சைக்கிளி போன்ற தமயந்தியின், தார் - சுயம்வரமாலையை, பெறாது - பெறாமல், போய் - திரும்பிப்போய், கார்க்குழல் - கருமையாகிய கூந்தலையுடைய, அரம்பையர் - தேவ கன்னியர்களுடைய, கமலம் வாள் முகம் - தாமரை போன்ற ஒளிபொருந்திய முகங்களை, பார்ப்பது எவ்வாறு - எப்படிப் பார்ப்போம்"—என்று - என்று, பரிவில் கூறினான் - வருத்தத்துடன் கூறினான்.

விரிவுரை:—"இந்தப் பேரெழில் வேந்தனும் தமயந்தியின் சுயம்வரத்திற்கே செல்வானானால், அவனைப் பார்த்தபின் நமக்கு அவள் மாலையிடமாட்டாளென்பது திண்ணம். ஆதலின் அங்குச்சென்று நாம் பரிபவமடைவதைக் காட்டிலும் வந்தவழியே திரும்பிப் போவதேநல்லது" என்று யமன் கூறியதைக்கேட்ட இந்திரன், "தமயந்தியின் மணமாலையைப் பெறாமல் இவ்வாறு திரும்பிப்போவோமெனின், ஊர்வசி மேனகை முதலிய தேவகன்னியர், 'யாம் இருக்க எம்மிலும் அழகுடைய ஒருத்தியை நாடிச்சென்ற இத் தேவர் கதியைப் பாருங்கள்' என்று பரிகசித்து ஒருவர்க்கொருவர் கட்சாடைபோக்கிக் களிப்பார்களே, அன்னவர்கள்முகத்தைப் பார்க்க நாம் மானம்கெத்து எவ்வாறு நிற்பது" என மனஞ் சோர்ந்தனன்.

செந்தார்ப்பசுங்கிளி, என்பது இரண்டு வேறுபட்ட நிறங்களைப் பொருந்த அமைத்தலால் விரோத அணி. இவ்வணி யிலக்கணத்தை, "கருங்குழலார் செங்கையினால் வெண்கவிரிப் பைங்கால்" என்று துவக்கும் நளவெண்பாச் செய்யுளின்கீழ் விரிவாக உரைத்திருக்கின்றோம் (1—229).

குறிப்பு:—போர்த்தொழில் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை, வலிமிகுந்தது. தார்ப்பசும் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை, வலிமிகுந்தது. தார் பெறாது - இரண்டாம் வேற்றுமைத்தொகை, வலிமிகவில்லை. பெறாது போய்-நிலைமொழி வினையெச்சமாயினும், ஈற்றிலிருப்பது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாதலால் வலி மிகவில்லை. கார்க்குழல் - பண்புத்தொகை, வலிமிகுந்தது, அல்லது கார் என்பதை இங்கு மேகம் என்ற பொருளில் கொண்டால், கார்போன்ற குழல் என உவமத் தொகையாகி அப்பொழுதும் வலிமிகும். (3—490). அரம்பையர் கமலம் - ஆறாம்வேற்றுமைத் தொகையாயினும் நிலைமொழி உயர்திணையாதலால் வலிமிகவில்லை.

---

அரத்தமுண் டொளிரும்வா ளவுணர்ச் செற்றுநந்
திருத்தகு செல்வமுஞ் சிறப்பு நல்கிய
விரைத்துணை ரலங்கலான் வீர சேனன்போ
லிருத்தலா லிவனள னென்ன வேண்டுமால். 13.

(உரை). "அரத்தம் - இரத்தத்தை, உண்டு - குடித்து, ஒளிரும் - பிரகாசிக்கின்ற, வாள் - வாள்களை ஏந்திய, அவுணர் - அசுரர்களை, செற்று - வென்று, நம் - நம்முடைய, திருத்தகு - அழகுவாய்ந்த, செல்வமும் சிறப்பும் நல்கிய - செல்வத்தையும் சிறப்பையும் மீட்டுக்கொடுத்த, விரைத் துணர் அலங்கலான் - வாசனையுடைய பூங்கொத்துக்களால் கட்டிய மாலையை அணிந்தவனாகிய, வீரசேனன்போன்று இருத்தலால்-வீரசேனனைப் போல இருப்பதால், இவன் நளன் என்ன வேண்டும்" இவன் நளனே என்று நாம் கொள்ளவேண்டும் (என்றான் இந்திரன்) - ஆல், அசை.

விரிவுரை:—அசுரர்களுக்குத் தோற்றுத்தோற்றுத் தேவர்கள் தம் பொன்னுலக வாழ்க்கையை யிழந்து



உழல்வதும், பூவுலக வேந்தர் சென்று அவுணரை வென்று அச்செல்வத்தைத் தேவர்க்கு மீண்டு மளிப்பதும் விண்ணவர்சரித்திரத்தில் பலமுறை நேர்ந்துளது. சம்பரனைவென்று, "இன்தளிர்க் கற்பக நறுந்தேன் இடைதுளிக்கும் நிழலிருக்கையை" இந்திரனுக் களித்தான் தயரதன். அசுரருக்கு அழியாமல் தேவர்களைக் ககுஸ்தனும் ஒருமுறை காத்தனன். அர்ச்சுனன், நிவாதகவசகாலகேயர்களை 'இரவி வந்தொரு திசையின்வாய் நிசியெனப் பொருது" வானவர்க்கு அரசளித்துளன். இவ்வண்ணம் வானவர்க்குதவிபுரிந்திருப்பவர்களில் ஒருவன் வீரசேன மகாராஜன். இவன் நளன் தந்தை. நளனை இதுகாறும் பார்த்திராத இந்திரன், தந்தையின் சாயலைக்கொண்டு அவன்மகனாகிய நளன் இவன் ஆதல்வேண்டும் என்று ஊகிக்கின்றான்.

குறிப்பு:—அவுணர் + செற்று = அவுணர்ச் செற்று; அவுணர்களைச்செற்று என்று விரியுமாகையால் இது இரண்டாம்வேற்றுமைத் தொகை. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாதென்பது பொதுவிதி. ஆயினும் இரண்டாம் வேற்றுமைத்தொகையோ, அல்லது இது எழுவாய்த்தொடரோ என்று சந்தேகம் உண்டாகக் கூடிய சில இடங்களில், இரண்டன் தொகைதான் என்று காட்டும்பொருட்டு வலி மிகும்என்று கூறியிருக்கின்றோம். (3 - 247). அவ்வாறு மயக்கம் விளைவிக்கக்கூடிய சந்தர்ப்பம் இச்செய்யுளில் நன்கு காணலாம். அவுணர் தாம் வீரசேனனைக்கொன்று தேவர்களை அளித்தனரோ, அல்லது வீரசேனன்தான் அவுணரைக்கொன்று தேவர்களை அளித்தனனோ என்ற ஐயுறும்படி இச்செய்யுள் அமைந்திருக்கின்றது. இந்நிலையில் 'அவுணர்' என்பது எழுவாயோ, அல்லது செயப்படுபொருளோவென்று எப்படித் தெரிந்துகொள்வது? ஆதலாற்றான் செயப்படுபொருளுடைய இரண்டாம் வேற்றுமைத் தொகையே அது என்று குறிப்பதற்கு வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்திருக்கின்றது.

---

சேற்றிதழ்த் தாமரை மலரத் தெண்கட
றோற்றுசெங் கதிரெனத் தோன்று நின்னையா
மேற்றநல் லோரையி லெழுந்தா லன்றோ
வாற்றெதிர்ப் பட்டன மலங்கல் வேலினாய். 14.

அன்வயம்:—"அலங்கல் வேலினாய், யாம் ஏற்ற நல் ஓரையில் எழுந்ததால் அன்றோ, சேற்று இதழ்த் தாமரை மலரத் தெள்கடல் தோற்று செம் கதிரெனத் தோன்றும் நின்னை ஆற்று எதிர்ப்பட்டனம்" (என்று இந்திரன் நளனுக்கு முகமன் கூறினான்)

(உரை) அலங்கல் வேலினாய்- மாலையணிந்த வேலாயுதத்தை ஏந்திய வேந்தனே, யாம் - நாங்கள், ஏற்ற நல் ஓரையில் - தகுதியான நல்ல இலக்கினத்தில், எழுந்ததால் அன்றோ - புறப்பட்டதினால்தான் அன்றோ, சேறு -சேற்றிலுள்ள, இதழ்-இதழ்களைஉடைய, தாமரை - தாமரைகள், மலர - மலரும்படி, தெள் கடல் - தெளிந்த கடலில், தோற்றும் - உதிக்கின்ற, செம் கதிரென - சிவந்த சூரியனைப்போல, தோன்றும் - காணப்படுகின்ற, நின்னை - உன்னை, ஆறு - வழியில், எதிர்ப்பட்டனம் - சந்திக்கின்ற பாக்கியம் உடையவர்களானோம்.

விரிவுரை:—"நாங்கள் புறப்பட்ட நல்ல இலக்கினத்தின் பயனாகவே உன்னை வழியில் எதிர்ப்படும் பேறு பெற்றோம்" என்ற முகமன் கூறிக்கொண்டே இந்திரன் நளன்பால் நெருங்கினான். "இவனும் நாமும் செல்வது ஓரேசுயம்வரத்திற்கானால் நம் மானம் போம் ஆதலின் திரும்பலே நலம்" என்றான் யமன். "திரும்பிச்சென்று அரம்பையர் முகத்தைப் பார்ப்பது எவ்வாறு" என அயர்ந்த இந்திரன், இவன் வள்ளலாம் நளனெனத் தேர்ந்தவுடன், "எதுகேட்பினும் மறுக்கானிவன், இவனைக்கொண்டே நம்கருமத்தை முடித்துக்கொள்ளலாம்" என்னும் ஊக்கம் அவனுக்குப் பிறந்திருத்தல் வேண்டும். நளனையே தமக்குத் தூதாகப் போக்குகின்ற சூழ்ச்சியும் இப்பொழுதே இந்திரனுக்குத் தோன்றிவிட்டது.

ஒலிக்கின்ற கடலின்நடுவே உதிக்கின்ற சூரியனைப் போல், ஆரவாரம்செய்யும் சேனையாகிய கடலின் நடுவே நளன் விளங்கித்தோன்றினான் என்னும் இது உவமையணி. "சூரியனைக்கண்டு தாமரை மலர்வது போல், உன்னைக்காண எங்கள் கண்களும் மலர்கின்றன" என்னும் குறிப்புடையது முதலடி.

குறிப்பு:—சேறு + இதழ் = சேற்றிதழ் (சேற்றில் உள்ள இதழ்) ஏழாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை யாதலால், நிலைமொழியீற்றில் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் ஏறியுள்ள றகர மெய் இரட்டிப்புணர்ந்தது (2-988).

ஆறு + எதிர்ப்பட்டனம், ஏழாம் வேற்றுமைத் தொகையில றகரமெய் இரட்டாமல் ஆறெதிர்ப்பட்டனம் எனப் புணரவேண்டுமாயினும் செய்யுளில் எதுகைக்காக இரட்டப்பெற்றிருக்கின்றது.

### இலக்கணம்

B. யகர ரகர ழகர மெய்யீறுகள்:—(தொடர்ச்சி)

II இவ்வீறுகளும் + மெல்லின மெய்களும்.

மொழிக்குமுதலில் வரக்கூடிய மெல்லினமெய்கள் ங ஞ ந ம என்னும் இந் நான்கே. அவைகளிலும், ஙகரமெய்யானது, அங்ஙனம் இங்ஙனம் எங்ஙனம் யாங்ஙனம் எனச் சுட்டு அல்லது வினாவெழுத்துக்களுக்குப்பின் அகரத்தோடு சேர்ந்து வருவது ஒழிய, வேறு அது மொழிக்குமுதலாக வரும் வழக்கில்லை.

(a) நிலைமொழி யிறுதியில் யகர ரகர ழகர மெய்களிருக்க வருமொழிமுதலில் வரும் ஞ ந ம எனும் மெய்கள் யாதும் விகாரமின்றி எல்லாத் தொடர்களிலும் இயல்பாய்ப் புணரும்.

சாய் + ஞாயிறு = சாய் ஞாயிறு
கார் + ஞமலி = கார் ஞமலி—(ஞமலி-நாய்)
வாழ் + ஞாலம் = வாழ் ஞாலம்
காய் + நல்கினான் = காய் நல்கினான்
புகர் + நிறம் = புகர் நிறம்
தமிழ் + நயம் = தமிழ் நயம்.
வாய் + மொழி = வாய் மொழி
துணர் + மாலை = துணர் மாலை
இதழ் + முகர்ந்தான் = இதழ் முகர்ந்தான்.

(b) முன்னுரைத்த விதி பொதுவிதி யாகும். யகர மெய்யீற்றிற்கு மாத்திரம் சிறப்பாக ஒருவிதி யிருக்கின்றது. அதாவது, மெய் பொய் செய் என்பனபோல் நிலைமொழி குறிலொடுசேர்ந்த யகர மெய்யை ஈற்றிலுடைய சொல்லாயின், வருமொழிமுதல் வரும் ஞகர நகர மகர மெய்கள் எல்லாத் தொடர்களிலும் மிகுந்தும் புணரலாம்.

மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்.
செய் + நன்றி = செய்ந்நன்றி.
பொய் + மொழி = பொய்ம்மொழி.
மெய் + நலம் = மெய்ந்நலம்.
மெய் + நின்றான் = மெய்ந்நின்றான்.
மெய் + மாண்பு = மெய்ம்மாண்பு.
நெய் + மணம் = நெய்ம்மணம்.

குறிப்பு:—(1) யகர மெய்போல் ஒலிக்கும் ஐ என்னும் உயிரேனும், அல்லது அதனோடு சேர்ந்த ஆனை கை மை போன்ற உயிர்மெய்களேனும் ஓரெழுத்தொருமொழிகளாய் நிலைமொழியாகி நிற்குமெனின் வருமொழிமுதல் ஞகர நகர மகரங்கள் மிகுந்தும் புணரலாம்.

ஐ + நுனி = ஐந்நுனி
கை + நகம் = கைந்நகம்
மை + மேகம் = மைம்மேகம்
கை + ஞான்றது = கைஞ்ஞான்றது
(ஞான்றல்-தொங்குதல்)

(2) இவ்விதம் தனிக்குறிலைச் சேர்ந்த யகரமெய்க்குப் பின்னும் ஐயொடு சேர்ந்த ஓரெழுத்தொரு மொழிகளுக்குப்பின்னும் வருமொழிமுதல் மெல்லின மெய்கள் மிகுந்தாலும் மிகலாம் என்பதேயன்றி மிகாமற் புணரினும் பிழையில்லை. மெய் நவின்றான், பொய்மொழி கைநீட்டினன் என்றும் இயல்பாய்ப் புணர்த்தலாம். ஆனால், தனிக்குறிலைச் சாராமல் வாய், காய், என்பனபோல் நெடிலைச் சார்ந்த யகரமெய்க்குப் பின் வருமொழிமுதல் மெல்லினமெய்கள் மிகுதல்கூடாது. வாய்ம்மொழி, காய்ந்நல்கினன் என்னின் அது பிழையாம். வாய்மொழி, காய்நல்கினன் என்றே புணரும். எனினும், காய்ந்நுனிஎன்றும் பூம்முரிஎன்றும் ஓரோவழி வருதலும் உண்டு.

(3) மேற்சொன்ன விதிகளின்படி யகர மெய்யீற்றின்முன் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தால் மிகலாமேயன்றி, ரகர ழகர ஈறுகளுக்குப்பின் மிகா. ஆயினும் ஓரோவழி, கதிர்ந்நுனி, இதழ்ந்நுனி, கதிர்ம்முரி, இதழ்ம்முரி என, ரகர ழகர ஈறுகளுக்குப்பின்னும் மெல்லினமெய் மிகலாகின்றது.

# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[548-வது பக்கத் தொடர்ச்சி]

### நடத்தை (Behaviour).

பழக்கச் செயலின் உட்டுடிப்பு:—இயற்கைச் செயலும் இயக்கவமைப்பும் வேறுவேறென முன்னரே கண்டோம். அவற்றை ஒன்றெனக் கொள்வோர்க்கு இயற்கைச்செயலும் பழக்கச்செயலும் ஒன்றேஎன்று தோன்றும். பழக்கச்செயலிலும் அதற்கேற்ற இயக்க அமைப்பு ஏற்படுகின்ற தன்றோ? பின் வேற்றுமைதான் என்னவென்று வினவின்,—ஒன்று இயற்கையமைப்பு, மற்றொன்று பழக்கத்தால வந்த இயைபு, என்று கூறுவர். இயற்கைச்செயனிலை என வேறு பிரித்து ஆராய்ந்துவந்த நமக்கோ அவை ஒருவகையாலும் ஒன்றாக விளங்கவில்லை. இயற்கைச்செயனிலையில் உட்டுடிப்புக் காணப்படுவதுபோலப் பழக்கச் செயனிலையில் உட்டுடிப்புக் காணப்படுகின்றதோ? காணப்படுகின்ற தென்பர் ஒருசாரார். பழக்கச்செயலைத் திருப்பித்திருப்பிச் செய்து நமது குழந்தை நம் எதிர் நிற்கவில்லையா! இவ்வாறு பன்முறையும் வேறொரு நோக்கமின்றிச் செய்வது எதனாலே, என்று கேட்டால், உட்டுடிப்பு என்ற உண்மையாலன்றோ, என்று விடையுரைப்பார். ஈது உண்மையா எனச் சிறிது ஆராய்வோம். இயக்க அமைப்பின் பழக்கத்தால் வரும் திறமைச்செயல்கள் மக்களிடையேதான் மிகுதியும் காணக்கிடக்கின்றன. உயிருளிகளில் உயர்நிலை பெற்றவைதாம் மக்களிடை பயிற்சிபெற்றுச் சிற்சில திறமைச்செயல்களைச் செய்து முடிக்கின்றன. நாய் பின்னங்காலால் நடப்பதும், காடி நேர்நிலை ஈராழி ஓட்டுவதும் காண்க இங்குப் புதியபழக்கச் செயல்களாய் விளங்குபவை உண்மையிலேயே புதிய செயல்களா? நாய் பறக்கின்றதா, எழுதுகின்றதா? முன்னரே நாய் எக்கிநிற்பதைக்கண்டுள்ளோம். சிலபோது முன்னங்கால்களைச் சுவர்மேலோ மரத்தின்மேலோ வைத்துப் பின்னங்காலால் நிற்பதை எந் நாயிடத்தும் காணலாம் அவ்வாறு எக்குவதற்கு முயலும்போது இரண்டோர் இமைப்போதளவேனும் நாய்கள் முன்னங்காலைக் காற்றில்விட்டுப் பின்னங்கால்மேல் நிற்கின்றன. இவ்வாறு இரண்டோரிமைப்போது செய்ததை நீண்டநேரம் செய்யவைப்பதுதான் இங்குப் புதுமை. ஆனால் இவ்வியக்கம் அதனிடத்திலேயே அமைந்துகிடந்தது. அங்ஙனமே காடியும் நேர்நிலைஈராழியை ஓட்டும்போது பயன்படுத்தும், குந்துதல் கைப்பிடியைப் பிடித்தல் அதனைத் திருப்புதல், காலை மாற்றிமாற்றி யசைத்தல், ஒருபுறமாக உடற்சுமை சாயாதபடி நேர்நிலையில் உடலை வைத்தல் முதலியசெயல்களை முன்னரே யறியும். பலபல நிலையில் வெவ்வேறாகச்செய்த இத்தொழிலனைத்தையும் ஒருநிலையில் ஒருங்கே செய்வதுதான் இங்குப் பழக்கத்தால் ஆகியது. ஆகையினால் இங்கும் பழைய இயக்கங்களே காணப்படுகின்றன. இவ்வுண்மையை நாம் மறத்தலாகாது. இவை பழக்கம்பெற்றபின் அச்செயல்களைத் திருப்பித்திருப்பித் தாமேசெய்கின்றன அன்றோ? ஈது உட்டுடிப்பால் ஆயது என்பர் ஒரு சாரார்? இவை இப்பழக்கத்தை எவ்வாறு பெற்றன வென்பதை நாம் ஆராய்தல்வேண்டும். இவற்றைப் பழக்குவோர் உணவுநாட்டம் என்ற இயற்கைச் செயனிலையைப் பயன்படுத்துகின்றனர். பழக்கும்போது அவற்றைப் பசியால் வாடவிட்டுப் பின் பழக்கச்செயலைச் செய்ய ஏவுகின்றனர்; திறம்பெறச் செய்தால் அதற்குப் பரிசிலாக உணவு முதலியன தந்துதவுகின்றனர். ஆகவே இப்பழக்கச்செயல்கள் உணவுபெறும் வழியாகிவிடுகின்றன. அந்தச் செயல்களைத் திருப்பித்திருப்பித் தாமே செய்கின்றபோது, அவை சோற்றுக்குக் கூத்தாடுகின்றன என நாம்



உணர்தல்வேண்டும். எனவே, இங்குக் காணப்படும் உட்டுடிப்புப் பழக்கச்செயலின் உட்டுடிப்பு அன்று; உணவுநாட்டம் என்னும் இயற்கைச்செயனிலையின் உட்டுடிப்பே யாகும். குழந்தைகளிடத்தில் தன்னெடுப்பு என்ற இயற்கைச்செயனிலையின் உட்டுடிப்பு மிகுதியுமுண்டு; ஆதலால் அவர்களும் தாம் பயின்றதைப் பன்முறையும் செய்து நமக்குக் காட்டுகின்றனர். எனவே, இப்பழக்கச்செயல்கள் நம் மியற்கைச் செயனிலையின் பணியாள்களே என்க. இயற்கைச் செயனிலைகளை விட்டுப் பழக்கச்செயல்களுக்கு ஏதேனும் உட்டுடிப்பு உண்டோ? துணிகட்டுகின்றேன்; தலை வாருகின்றேன்; எழுதுகின்றேன். இவைகள் எல்லாம் பழக்கத்தின் பயனாக நான் திறம்பெறச் செய்யும் செயல்கள். ஆனால் இவற்றில் ஏதேனும் உட்டுடிப்பு உண்டோ? துணிகட்டித் துடிதுடிக்கின்றேனா? ஏதேனும் புதுமையைக் காணச்செல்லவேண்டுங்கால் இத்தகைய துணி கட்டவேண்டுமென ஏற்படுத்தினால் அத்துணி கட்டத் துடிக்கின்றேன். அது விருப்பத்தின் செயல்.

முதலின் கருவி:-செயல்கள் அனைத்தும் நம் நோக்கத்தை முடிக்கும் கருவிகளே யாகும். அவைகளே முதலாகி முடிவதில்லை. நாம் பயின்றதைத் திருப்பித் திருப்பி ஒப்புவித்துக்கொள்கின்றோ மன்றோ-அங்கு வேறொருநோக்கம் இல்லையன்றோ-ஆதலின் ஒப்புவித்தலே ஒப்புவித்தலின் முடிபாகவில்லையா-எனின், அங்ஙனம் அன்று. நாம் பயின்றதை மறவாமலிருப்பதற்கு ஒப்புவிக்கின்றோம். அல்லது நம்மேன்மையை மெச்சி ஒப்புவிக்கின்றோம். அங்குத் தன்னெடுப்பென்ற இயற்கைச்செயனிலை செயலுறுகின்றது கறுவுகொண்ட ஆண்மகன் தன் பகைவனைக் கொல்வதற்காகத் தன் கத்தியைத் தீட்டுகின்றான். அவ்வாறே ஒப்பனையில் விருப்பமுள்ள பெண்மகளும் பின்னேவரும் மணக்கோலத்தில் முடித்துக்கொள்வதற்காக வாங்கிவந்த தலைமுடியையும் தோள்வளையையும் முன்னரே புனைந்து தகுதி பார்க்கின்றாள். பின்னே வருவனவற்றை நோக்கி முன்னேற்பாடாகத் தகுதிபெறத் தம்செயல்களைத் திருத்தியமைத்தலே இவற்றின் நோக்கமாகும். பின்னொருநாள் ஒப்புவிப்பதற்காக அதனைமறவாது இப்போதே ஒப்புவிக்கின்றேன். "அப்பொழுதைக்கிப்பொழுதே சொல்லிவைத்தேன் அரங்கமா நகருளானே" என்பர் தொண்டரடிப்பொடியாழ்வார். ஆகவே செயல்கள் அனைத்தும் நம் நோக்கத்தை நிறைவேற்றும் வழிகளேயன்றி நாம் போகும் முடிவான இடம் அல்ல. ஒருசெயலே பல நோக்கத்தையும் நிறைவேற்றப் பயன்படலாம். அஞ்சியும் ஓடலாம், வெகுண்டும் ஓடலாம்; உண்ணவும் ஓடலாம்; ஆனால் வேறு சில செயல்கள் வேறு நோக்கமின்றிச் செய்யப்படுவனபோல் தோன்றுகின்றன. ஏதேனும் எண்ணும்போது ஒருவன் உகிரைக் கடிக்கின்றான்; மற்றொருவன் எழுதும்போது வாயை வளைக்கின்றான்; வேறொருவன் பேசும்போது துரும்பைத் திருகுகின்றான் உகிரைக்கடித்தல் வாயைவளைத்தல் துரும்பைத்திருகுதல் என்ற இவற்றின் நோக்கம் என்ன? பேசுதல் எழுதுதல் எண்ணல் என்ற அவற்றிற்கும் இவற்றிற்கும் ஏதேனும் தொடர்புண்டோ; ஆதலின், இவற்றைச் செய்தலே இவற்றின் நோக்கம் எனச் சொல்லலாமோ; எனின், சொல்லலாகாது. பழக்கமாதற்குமுன் ஒருசெயலைச் செய்யத்தொடங்கிப் பயிலும்போது, நமது உடல் முழுதையும் ஆட்டுகின்றோம். நேர்நிலைஈராழி பயில்வானைக் காண்க. நாம் வேண்டியதை நேரே செய்ய முடியாது நரம்புக்கிளர்ச்சி பல வழியாகவும் பரவுகின்றது. வேண்டாத உறுப்புக்களிலும் பாய்தலால் அவைகளும் இயங்குகின்றன. திறம்பெறத் திறம்பெறப் பயனற்ற செயல்கள் மறைகின்றன. கருத்தை நாட்டி அவற்றை ஒழித்துக்கொள்கின்றோம். அவ்வாறு அவற்றின்மேல் கருத்தை நாட்டி ஒழிக்காதபோது அவையும் பழக்கச்செயலின் ஓர் உறுப்பாகப் பழக்கத்தில் வந்துவிடுகின்றன. பழக்கமான பின்னர் நம்மையும் அறியாமலே அவை செயலுறுகின்றன. இவ்வாறுதான், வாயைவளைத்தல் முதலியவைகளும் பழக்கமாகப் படிந்துவிட்டனஎன்க. எனவே இங்கும் அச்செயல்கள் எண்ணுதல் முதலிய மற்றொன்றை நோக்கி எழுந்தனவேயன்றித் தம்மைநோக்கித் தாமே எழுந்தன அல்லவாம். ஆகவே பழக்கச்செயல்கள் அனைத்தும், வேறொரு நோக்கத்தை நிறைவேற்ற வருவனவேயன்றித் தாமே தூண்டும் உட்டுடிப்போடு கூடிய நோக்கமாவதில்லை என்பது விளங்குகின்றது.

உட்டுடிப்புப் பழக்கம்:— உடற்பழக்க மென்று மேலேகாட்டியவை, இயற்கையமைப்போடு இயைபுற வேண்டுதலின் பல்கிப்பெருக இடமில்லை. ஆனால்வேறு வகையானபழக்கங்கள் பல்கிப் பெருகுகின்றன. அவைதாம் மனப்பழக்கங்கள். மெய்ப்பாடுகளைச் செயற்கைத்தூண்டல்கள் எழுப்புவதனை முன்னரே கண்டோம். புதியபுதிய பொருள்களை முதலாகக்கொண்டு உட்டுடிப்புகள் எழுகின்றன. பழக்கத்தால் நாம் பல பொருள்களையும் அஞ்சவும் வெகுளவும் பழகுகின்றோம். நாயைமுதலில் தொட்டுப்பார்த்தகுழந்தை கடியுண்டதால் பின்னர் அந்நாயைக்கண்டு அஞ்சியதைக் கண்டோம். அங்ஙனமே விலங்குகளும் செயற்கைத் தூண்டலால் மெய்ப்பாடெழ நிற்கின்றன. மரம் வெட்டி Beaver) என்பது வாத்து முதலியவற்றின் அடிபோலத் தோலடி உடையதாய், உடும்பு முதலியவற்றின் வால்போலப் பொரிவால் உடையதாய் அழகிய மயிர்ப்படாம் போர்த்து நீர்நிலை யருகே வாழும் விலங்கு. அது மரங்களை இரவில் வெட்டி வாழும். பத்துநாளில் ஒரு பெரிய மரத்தை வெட்டிவிடும். இவ்வாறு அது ஒருமரத்தை வெட்டிவருகையில், அம்மரத்தில் ஒரு மின்விளக்கை ஒருவர் வைத்தார். அம்மரம் அசையும்போதெல்லாம் பளிச்சுப் பளிச்சென ஒளி மிக வீசி எரியுமாறு அவ்விளக்கை அமைத்தார். அன்றிரவு அம்மரவெட்டி மரத்தைவெட்டத் தொடங்கியபோது மரம் அசைந்திருக்கும் அன்றோ? அசையுந்தோறும் பளிச்சுப் பளிச்சென அம்மரத்தில் மின்னொளி தோன்றியது. மனந்திடுக்கிட்டு அம்மரவெட்டி அஞ்சி யோடியது. பின்னர் அம்மரத்தினருகே வந்தபோதெல்லாம் அவ் வச்ச உட்டுடிப்பே எழுந்ததால் அதைக்கண்டதும் ஓடுவதாயிற்று. அரைகுறையாகத் தன் வேலையை விட்டுவிட்டது. முன்னர் அம்மரம் தன்னைவெட்டுமாறு அம்மரவெட்டியை விளித்து நின்றது; பின்னர் அச்சக்குறியாய் அதனை ஓட்டி நின்றது. அச்சநிலையும் அம்மரத்துணர்வும் அம்மரவெட்டிக்கு ஒன்றாய்விட்டன. ஒருசிறு நாய்க்குட்டி சிறிய பையன் அருகேவந்து அவன் கையை நக்கி மேல் வீழ்ந்து விளையாடுகையில் அவன் அன்றுதான் ஆரம்பி

189113

வந்த பாவையைக் கீழ்தள்ளி ஓடித்துவிடவே வெகுண்டெழுந்து அச்சிறுவன் அந்நாயை நையப் புடைக்கின்றான். ஓடோடியும் கல்லெடுத்தெறிகின்றான் கல்லடியால் காலும் சுளுக்குகின்றது; குருதிவடியும் புண்ணும் எழுகின்றது. அந்த நாய் பின் அவனைக் கண்டபோதெல்லாம் அஞ்சியோடுகிறதேயன்றி முன்போல அவனருகே வாலைக் குழைத்து அன்பு காட்டி வருவதில்லை. இந்தத் துய்த்துணர்வு (Experience) பன்முறையும் நிகழுமானால் அது நன்றாகப் பதிகின்றது. பழக்கமில்லாமற்போனால் இந்நிலை மறைந்துவிடுகிறது. முன் நிகழ்ந்த நிகழ்ச்சிக்குப் பின் அப்பையன் பலமுறையில் அந் நாய்க்குட்டிக்குப் பாற்சோறும் நெய்ச்சோறும் ஊட்டியிருப்பானாயின் அவ்வச்சம் மறையும் அன்றோ? அங்ஙனமின்றி அதனைக் கண்டபோதெல்லாம் வெருட்டிக்கொண்டிருப்பானாயின் அவ்வச்சம் நிலைபேறடைகின்றது.

அடி உதவுமா:—இவ்வாறுதான் அறிவு வளர்கின்றது. விலங்குகளைப் பழக்குபவர் இதனை நன்கு அறிந்துள்ளார்கள். தகுதியற்ற செயலைச் செய்யும்போது ஒருமுறை ஓங்கியடித்துவிட்டால் பின் பிரம்பைக் கண்டதும் விலங்கு அஞ்சுகின்றது. பின்னர் அடிக்கவே வேண்டுவதில்லை; பிரம்பைக் காட்டினால் போதும். அச்சமும், பழைய தகுதியற்ற செயலும், ஒன்றாய்விடுவதால் பழையசெயலை மறந்து புதிய செயலைக் கற்றுக்கொள்கிறது. தாய்மார் அடிக்கப்புகுந்தாலும் அடிக்கக் கைவருவதில்லையாதலினால் அடிக்கடி அடித்தாலும் உறைக்க அடிப்பதில்லை. அவ்வடியையும் அவ்வடி அடிக்கும் பிரம்பையும் அவ்வம்மையையும் குழந்தை அஞ்சுவதுமில்லை. தந்தையோ ஒருமுறையடித்தாலும் உறைக்க அடித்து விடுவதால் அவரைக் கண்டவுடன் அஞ்சுகின்றான் பையன். இதுபற்றியே ஆண்டாள், கண்ணனைப் புனைந்துரைக்கையில் தாயினெதிரில் புலியாய் நின்றதையும் தந்தையின் கொடுமைக்கெதிரில் தகுதிபெற்று நின்றதையும்,

> கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
> ஏரார்ந்த கண்ணி அசோதை இளஞ்சிங்கம்

என்று பாடுகின்றார். ஆனால் அச்சத்தை எழுப்பினால் எச்செயலும் தடைபடுகின்றது. ஆதலின் செய்யாதிருக்கும் எதிர்மறைநிலையையே நாம் வற்புறுத்தக்கூடும்; ஒன்றைச்செய்து நம்மோடு ஒத்துழைக்க வேண்டினால் அவ் வுடன்பாட்டுநிலை அச்சநிலையில் எழுவதில்லை. குழுநாட்டம் என்ற இயற்கைச் செயனிலையுள்ள இடத்தில் தன்னடக்கம் என்ற இயற்கைச் செயனிலையும் உண்டு எனக் கண்டோம். ஆதலின் குழுநாட்டம் என்பது விளங்குகின்ற உயிருளிகளிடை தன்னடக்கம் என்பதை எழுப்பி ஆட்கொள்ளுதல் வேண்டுமேயன்றி அச்சத்தை எழுப்பி ஆட்கொள்ளுதல் ஆகாது. நாய்க்குப் பாற்சோறூட்டி நம்வழியே திருப்புவது எளிது. குழுநாட்டம் என்பது விளங்கப்பெறாத புலி முதலியவற்றை அச்சம் என்பதை விளைவித்தே ஆட்கொள்ளுதல் வேண்டும். அச்சத்தை எழுப்பினால், அடியையும் பிரம்பையும் அஞ்சுவதோடு குழந்தைகள், அடிப்போரையும் அஞ்சுவதுமன்றி அவர்களைப் பெரிது வெறுத்தும் நிற்பார்கள். ஆதலால் அடிபட்ட பிள்ளைகள் தமது கணக்காயனாரையும் தமது தந்தையாரையும் பகைத்து எதிர்நிற்கின்றனர். அதுவுமன்றி அச்சமென்பது நம் மருமந்த பிள்ளைகளின் மனத்தையும் கொல்கின்றது. ஆதலின் "அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவான்" என்பது உண்மையன்று. பிள்ளைகளிடத்து நாம் வேண்டுவது உடன்பாட்டுநிலையில் எழும் ஒத்துழைப்பேயன்றி எதிர்மறைநிலையில் எழும் மன எரிவு அன்று. பிரப்பம்பழம் மனத்தைப் புளிக்கச் செய்யுமே அன்றி மனத்தைக் கனிவிப்பதில்லை.

பிற மெய்ப்பாடுகள்:—அச்சமென்ற மெய்ப்பாட்டையும் ஓடிஒளிய முந்தும் உட்டுடிப்பையும் எடுத்துக்காட்டாகக் கொண்டு விளக்கினோம். மற்றைய உட்டுடிப்புகளும் இங்ஙனமே புதியபொருள்கள் பலவற்றைச் செயற்கைத்தூண்டலாகக் கொண்டு எழுகின்றன. பெரிய நாயொன்று தெருவழியே போகின்றது; சிறியபையன் அதன்மீது கல்லை எறிகின்றான். பின்னர் அவனைக் கண்டபோதெல்லாம் குரைத்துக்கொண்டே அவனை வெகுண்டு வெருட்டி ஓட்டுகின்றது. புலாற்சோறு தின்னும் இயற்கையுடைய நாய் பார்ப்பனர்வீட்டில் பருப்புச் சோறு தின்னப் பழகுகின்றது. கைக்கும் கள்வகை பலவற்றையும் முதலில் வெறுத்துநின்று பின் பழக்கத்தால் மக்களைப் போல உட்கொள்ளுகின்றது. தன் குட்டியை வளர்ப்பதுதான் விலங்குகளின் இயற்கை. ஆனால் சில விலங்குகள் பிற இனத்துக் குட்டியையும் அன்போடு பாராட்டப் பழகுகின்றன. தாய்மையும் இவ்வாறு பழக்கத்தால் வளர்கின்றது. இவ்வாறு இயற்கைச்செயனிலையோடெழும் ஒவ்வோர் உட்டுடிப்பென்ற கடைகால்மேலும் பல செயல்கள் என்ற கோட்டைகள் கட்டப்படுகின்றன. இங்குப் புதிய உட்டுடிப்புகள் உண்டாகவில்லை. பழைய உட்டுடிப்புகளே புதியவழிகளில் பாய்கின்றன. இவ்வாறு உலகத்துப் பொருள்களைப் பலவகையாக அறிந்து வேறுபிரித்துணர்ந்து அஃததற்குத் தக்கவாறு எதிரூன்றி நிற்கின்றோம்.


ஒட்டக்கூத்தர் பாடிய

**தக்கயாகப் பரணி**

(உரையுடன்)

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம்:—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.




# "தானே நிறைந்த தனி நெஞ்சம்"

## முன்னுரை

அகம் புறக் கரணங்கள் பதினென்றில் அந்தக்கரணமாகிய 'மனம்' என்பதொன்று. மனம் இல்லாத ஜீவன் உலகில் எதுவுமே இல்லை, மனம் என்னுமிது இல்லையென்றால் ஜீவனில்லை என்று சொல்லவேண்டும். இன்றேல் பிணமென்று சொல்லவேண்டும். 'மன்' என்றால், நினைத்தல் என்பதுபொருள். நினைத்தலைச் சிறப்பாக உடையவர்கள்தாம் மனிதர்களென்னப்பட்டார்கள். மனம் எப்பொழுதும் ஒன்றை நினைத்துக்கொண்டேதான இருக்கும். அவ்வாறு நினைக்கின்றமனத்தை இரண்டாகப் பகுக்கலாம். அதாவது:—'தூயமனம்', 'தீயமனம்' என்று. தூயமனம் வேதப்பயிற்சியும், தருமசிந்தனையும் உடையதாய்த் தயைமுதலிய நற்குணங்களிலே நனைந்துகொண்டிருக்கும். தீயமனம் நாஸ்திகபுத்தியொடு, அழுக்காறு, அவா, வெகுளி, முதலாகிய துர்க்குணங்களிலே தோய்ந்துகொண்டிருக்கும். ஒருவன் தன் மனத்தைத் தூய்மை செய்துகொள்ள வேண்டுமானால், தீமையை விலக்கலும், நன்மையை நினைத்தலும், மேற்கொள்ளவேண்டும். மனம் தீமையில் முதன்முதற் புகுவதற்குக்காரணம் அவாவாகும். அவாவை விலக்கவேண்டும் என்று எவரும் எளிதில் கூறிவிடுவார்கள்; செயலில் அரிதே. அவாவே நன்மை செய்தற்கும் முதற்காரணமாயிருக்கின்றது என்பதை மறக்க முடியாது. ஆனால், நன்மையில் ஒருருவமும் தீமையில் ஒருருவமும் தாங்கிநிற்கும் மனமானது இந்த அளவோடு போதும் என்று மகிழத்தக்க பொருளைப் பெறுகின்றவரையில் மேலும் மேலும் அவாவிக்கொண்டே நிற்கும். அவா அமைதியடையத்தக்கபொருளைக் காட்டாமை மனிதனுடைய குற்றமாகும். கூலிக்காரன் நாலணா பெறும்போது ஆறணா விரும்புகின்றான். ஆறணா கிடைத்தபின் அதன்மேலும் விரும்புகின்றான். நாலு காணி உள்ளவன் பத்து காணி விரும்புகின்றான். அதுவுங்கிடைத்தால் அதன் மேலும் விரும்பிக்கொண்டே போகிறான். உத்தியோக வரிசையிலேயும் அவ்வாறே மேலும்மேலும் ஆசைப்படுகிறார்களென்பது கண்கூடு. இப்பூமியின் ஒரு கூறு ஆள்கின்ற அரசனும் மற்றொரு கூறும் விரும்புகிறான். அவ்வாறே பூமிமுழுதும் ஒருவனே ஆள்வதாய் வைத்துக்கொண்டாலும் வேறோர்பூமியும் விரும்புவானென்பதில் தடையில்லை. ஆதலின் எண்ணத்தக்க பொருளெல்லாம் அல்லது எண்ணத்தினுள்ளடங்கும்பொருளெல்லாம் ஒருவன் தன்னுடையதாக இருக்க எண்ணுகின்றான். அது குற்றமுமன்று. அவா அண்டங்களைக்காட்டிலும் பரந்து பெரியதாயிருப்பதால் அனைத்தும் அதனுள் ளடங்குகின்றது. சமுத்திரம் போன்ற ஓர் பெரிய பொருளிடத்திலே அவாவென்கிற பாத்திரத்தை முகக்க விரும்புவோமானால் அவா அடங்கிவிடும். அதுகாறும் அவா ஓர் அமைதியை அடைய இயலாதென்பதை அநுபவபூர்வமாய் ஒவ்வொருவரும் அறியலாம். இதனாலன்றோ 'எதையறிந்தால் எல்லாம் அறிந்ததாய்விடுமோ அதை யறி' என்று வேதம் முறையிடுகின்றது. அதை எது அறிவிக்கின்றது என்றால், வேதமன்றோ?

## ஆதி மறை

வேதத்தை ஏன் அறியவேண்டுமென்றால், உலகில் மனிதர் உய்வதற்கு இறைவனால் தரப்பட்டவைகளிலே முதன்மையானது அது. அவ் வேததத்துவங்களைக் கொண்டுதான் ஏனைய சாஸ்திரங்கள் பிறந்தன. அவ்வேதமானது இறைவனை நமக்குக் காட்டித்தருகின்றது. அவ்வேதத்தை இறைவன் நமக்குக் காட்டித் தந்தான். அத்தகைவேதம் மிகப்பழைய காலத்திலிருந்துளது என்றால், என்று இறைவனுண்டோ அன்றே அதுவுமுண்டு.

## மறை

என்றுமுள்ள அம்மறையை இறைவன் அறிந்து ஆன்மாக்களின் நன்மையின்பொருட்டு ஓதுகின்றான். அது ஒலிவடிவந் தாங்கி ஆகாசத்தில் படிந்திருக்கின்றது. அவ்வாறு எவருக்குங் காண இயலாது மறைந்திருப்பதாலேயே 'மறை' யெனப்பட்டது. அத்தகைய மறையை ஆதியிலே மஹரிஷிகள் தம் ஏகாக்ர சித்தத்தினாலே அறிந்தார்கள். அவ்வாறு அறிந்த வேதத்தை உலகம் உய்யும்பொருட்டுத் தெரிவித்தார்கள். எந்தெந்த ரிஷி எந்தெந்தப் பாகம் தெரிவித்தாரோ அம்மகரிஷி பெயர்கொண்டு அப்பாகம் முடிகின்றது. இதனாலேயே அம்மகரிஷிகள் இருந்த காலத்தைக்கொண்டும் பிற காரணங்களைக்கொண்டும் மேனாட்டு மாக்ஸ் முல்லவர் முதலான அறிஞர்கள் வேதம் இற்றைக்கு நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னேதான் உண்டாயிற்றென்றார்கள். அதுவும்தவறென்று ககோள சாஸ்திரத்தால், மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் விஷுவன் வருகின்ற கதியைக்கொண்டு வேதத்தில் கூறுகின்ற ஆதாரங்களின்படி, திலகாசார்யர் "வேதகால நிர்ணயம்" என்னும் கிரந்தத்தில், வேதகாலம் ஆறாயிரத்துக்குக் குறையாமல் எண்ணாயிரவருடம் வரையில் ஆமையலாமென்ற காரணங்கள் கிடைக்கின்றதாயினும் அதன்மேல் இன்னும் சென்றுகொண்டே இருப்பதால் நின்றுவிட்டார். ஆதலால் காலநிர்ணயம் செய்யமுடியாத அநாதியான வேதத்தைத் தம் ஞானபூரணத்தினாலே ஒலியின் உதவியினால் ஆகாசத்திலிருந்ததைக் காதுகளால் கேட்டு மனத்தில் பதியவைத்துக் கொண்டார்கள். இவ்வாறு ரிஷிகள் பெற்றதைத்தான் பாதஞ்சலயோக சூத்திரம் "ச்ரோத்ராகாச சம்பந்த சம்யமம்' என்று கூறுகின்றது. மேனாட்டார் சிலர்தம் கொள்கைப்படியும், வேதம் பிறத்தலும் உண்டு. அதாவது பிரளயகல்பத்தின்முன் அத்யயனம் செய்து வைத்திருந்ததை நினைவிற்கொணர்ந்து உதவுவதுண்டு. அதை அந்தச் சூத்திரம் 'சம்ஸ்கார சம்பந்த சம்யமம்' என்று கூறுகின்றது. ஆதலால் வேதம் என்று வெளிவந்திருந்த போதிலும் அநாதி என்பதில் ஐயம்வேண்டாம்.

## நூல்

அத்தகைய சிறந்த மறையின் கருத்தைக்கொண்டு வேதத்தின் பொருள் விளங்காத மக்களுக்காக, ஸ்மிருதி இதிகாசம் புராணம் என்று பன்னூல்கள் தோன்றின. வேதத்திலிருப்பதைக் காட்டிலும் பலபடி பல்கி ஸ்மிருதி இதிகாச புராணங்களிருந்த போதிலும் வேதசம்மதமாயிருப்பதாலன்றோ 'பகவத்கீதை'யை எவரும் போற்றுகிறார்கள். தவிர, கீதோபநிஷத் என்றும் சொல்லப் படுகின்றது.

## அனைத்தும்

அவ்வாறு தோன்றின வேதத்தை வியாஸபகவான் நான்காகப் பாகுபடுத்தினர். என்றால், கற்பனையாய்ச்

செய்ததுமன்று. சடகோபர் அருளிய திருவாய்மொழி ஒரே பிண்டமாக இருக்கப் பிற்பட்ட ஆசாரியர்கள் ஊன்றிநோக்க ஆரம்பித்தபோழ்து எழுத்து அசை சீர் அடி தொடை முதலியன உடைய பாக்கள் பத்து கொண்ட பதிகங்கள் பத்துகொண்ட பத்தும், பத்து பத்து கொண்ட திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களென் றறிந்ததாய்க் குருபரம்பரை கூறுவது போன்று, வேதத்தை வியாஸர் ஊன்றிநோக்கச் சில பாகம் வசனமாகவும், சிலபாகம் தோத்திரமாகவும், சிலபாகம் ராகமாகவும், சிலபாகம் மந்த்ரமாகவும், இருக்க முறையே ருக், யஜுர், சாம, அதர்வணமென்று பெயரிட்டு அவைகளைப் பிரிக்கலானார். இதனால் வியாஸபகவான் வேதத்தைத் தாம் புதிதாக ஒன்றும் செய்யவில்லை. கலந்திருந்ததைப் பிரித்தெடுத்தார்களென் றேற்படுகின்ற தன்றோ? இந்நான்கு வேதங்களும் பஞ்சாதிகளென்றும், சாகைகளென்றும், மண்டலங்களென்றும் பல்லாயிரம் பிரிவுகளையுடையதாயிருக்கின்றன. ஆதலினாலன்றோ; "அனந்தோவை வேதா:" என்று கூறப்படுகின்றது.

### தேர்ந்து

இவ்வாறு பரந்துகிடக்கின்ற வேதத்தை மகன் தானே அறிந்துகொள்ளும் ஆற்றல் உடையவனாகவும் இருக்கவில்லை. படித்து அறிந்துகொள்பவனாகவும் இருக்கவில்லை. ஆதலாலே தொன்றுதொட்டுப் பாம்பரையாகப் பெரியோர்களாலே சொல்லக்கேட்டு அத்யயனம் செய்துகொண்டுவரப்படுகின்றது. பெரியோர்கள் சொல்லக் காதினால்கேட்டு அத்யயனம் பண்ணுவதினாலேயே அவ் வேதத்துக்கு "ச்ருதி" என்றும் ஓர் பெயருண்டு. பண்டைக்காலததில் வேத மாத்திரமன்று, எந்நூலும் ஆசாரியன் வாயிலாய் அறியாது தான்தோன்றித்தனமாய்ப் படிக்கும் பழக்கமே இல்லை என்பதை நிரூபிக்க இன்னும் அத்தகை பெரியோர்கள் இருக்கிறார்கள். இன்றளவும் வைணவத்தில் சம்ப்ரதாய க்ரந்தங்கள் ஆசான்மூலமாகத் தான் அறியவேண்டுமென்ற நியதி இருந்துகொண்டிருக்கிறது.

### உணர்ந்த

வேதசாஸ்த்ரங்கள் வேண்டுமானால் எத்தனையும் படித்துவிடலாம். அந்த அளவிலே அதனால் யாதும் பயனில்லை. உணரவேண்டும். தன் எண்ணத்தில் ஊறவேண்டும். தன் அநுபவத்தில் காணவேண்டும். எவ்வளவும் கற்றும் தன் அநுபவத்தில் அறியாமலும் நடக்கையிலில்லாமலும் இருக்குமானால் அவன் உணர்ந்தவனல்லன், படித்தவனுமல்லன். கற்பது உணர்வதற்கே. கற்று உணராதவனினும் கல்லாதவனே நல்லவன். கல்லாது உணராதவனால் உலகுக்கோர் தீமையில்லை. உணர்தலே அவசியம். ஆதலாலன்றோ; ஆழ்வார்களும் " உணர்ந்துணர்ந்து " என்றே பிரயோகித்தார்கள்.

### நீதிநெறி யாளர் நெஞ்சம்

இதனாலன்றோ ஆதியில் ஆசாரியர்கள் சீடர்களைத் தேர்ந்தெடுப்பது. எல்லார்க்கும் ஒன்றை உபதேசித்துவிடுவது பெரியார் பழக்கமன்று. பரம்பரையாகப் பெரியோர்களிடத்தில் பாடங் கேட்டவர்களுக்கும், தான்தோன்றித் தனமாகவும், தகாதவர்களாகவும் இருந்து படித்தவர்களுக்கும் இருக்கும் வித்தியாஸமும், பின்னவர்களால் இவ்வுலகமானது அடைகின்ற சீர்கேடும் உரைத்து முடிவதா? உலகத்தைத் திருத்த வந்த உத்தமப்பெரியார் நம் எம்பெருமானாரே திருமந்த்ரார்த்தம் அறிவதற்குத் திருக்கோட்டியூருக்குப் பதினெட்டுமுறை நடந்தாரென்றால், ஏனையோர்களை எத்தனைமுறைஎத்தனைவகையில் பரிசோதித்துச்சீடர்களாகக் கொண்டிருப்பார்களென்பதை நாமே யூகித்துக்கொள்ளவேண்டும். அருமையானதும், அனாதியானதும், முதன்மையானதும் ஆன வேதத்தைப் பொரியோர்கள் நீதிநெறியாளன் நெஞ்சத்திலன்றித் துஷ்ப்ரப்ருதிகள் நெஞ்சில் பதிய வைப்பார்களோ. தக்க ஆசார்ய சிஷ்யகோடி பாம்பரையில் வந்ததாலன்றோ அனர்த்தமின்றி முரணின்றிப் பொருளை அறிந்தார்கள்.

### யாதும் நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்று

அவ்வாறு அறிந்த பெரியார்கள்தம் நெஞ்சு மிகத் தூய்மையாகவும் நிறைந்தும் இருந்தது. அவர்கள் உலகம் அநித்யம்என் றறிந்தார்கள். உகிலுள்ளஎல்லாப் பொருள்களும் அநித்யமென் றறிந்தார்கள். உடல் அநித்யமென் றறிந்தார்கள். உயிர் நித்யம் என்றறிந்தார்கள். இறைவனை யடையவேண்டுமென் றறிந்தார்கள். இறைவன்தன்னை அடைவதற்கே தனுகரணபுவனபோகங்களெல்லாம் தந்துள்ளானென் றறிந்தார்கள். பிறவிப்படிகளின்றும் ஏறுவதற்கே வினையைத் தந்துளான் என்றறிந்தார்கள். அவனை அறிவதற்கே வேதம் தந்துளான் என்று அறிந்தார்கள். இத்தனையோடும் அவனைக் காட்டுவதற்கே ஆசாரியனைத் தந்துளான் என்று அறிந்தார்கள். தான் என்பதை அகற்றினார்கள். தன்னுடைமை என்பது ஒன்று இல்லை என்றறிந்தார்கள். தன்னுடைமை என்பது தொன்றில்லாதபோது அதனால் வருகின்ற துன்பத்தினின்றும் நீங்கினார்கள். எல்லாமாயிருக்கின்ற எம்பெருமானை அறிந்தார்கள். யாதும் நிரப்பாமல் எல்லாம் நிரம்பப் பெற்றார்கள். இத்தகைய பெரியோர்களை, புறத்தேகிடக்கும் பொருளால் வருகின்ற தீமை துன்புறுத்துவதில்லை, பிறர் இகழ்வுக்கும் அவர் கலங்குவதில்லை, புகழுக்கும்மகிழ்வதில்லை. அவர்கள் ஒருபொருளை விரும்புவதுமில்லை, வெறுப்பதுமில்லை. எதையறிந்தால் எல்லாமறிந்ததாகுமோ அதை அறிந்தார்களன்றோ? ஆதலினாலன்றோ, தானே நிறைந்த தனி செஞ்சமுடையவராயினர்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

நஞ்சன்கூடு சோல் ஏஜெண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்




குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்

டிப்போ.,
பம்பாய்
கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
ஜீவஸுதா (Reg.)
பாதாமி ரசாயனம்
பிருங்காமலக தைலம்

பிரான்சு:
மதுரை
காஞ்சீபுரம்.

ஜெனரல் ஏஜெண்ட்:-யுனைடட் கன்ஸர்ன் 54 பந்தர்தெரு, சென்னை.




# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[552-வது பக்கத் தொடர்ச்சி]

1-ம் பத்து 8-ம் தசகம்.

கலந்தென் னாவி
நலங்கொள் நாதன்
புலன்கொள் மானாய்
நலங்கொண் டானே. 6.

**உரை:**—என்னோடு கலந்து என் ஆத்மாவாகின்ற ஆநந்தவஸ்துவைக் கைக்கொண்ட என் ஸ்வாமி, எல்லாரையும் தன்ஸௌந்தரியத்தால் வஞ்சிக்கத்தக்க ஆச்சரியமான குள்ள வாமனரூபங் கொண்டு மூன்று லோகத்தையும் மஹாபலி சக்ரவர்த்தியினிடத்தில் தானமாக வாங்கிக்கொண்டான்.

குறிப்பு:—மான் - வடிவழகு உடையவன். நிலம்-பூமி-இங்கு மூன்று லோகங்களுக்கும் உபலக்ஷணம். இராக்ஷஸ குரு சுக்கிராசாரியார் மஹாபலியினிடத்தில் "உன்னிடம் வந்து யாசிப்பவன் மஹா விஷ்ணு, அவன் குள்ளப் பிரம்மச்சாரி வடிவம் எடுத்து வஞ்சிக்க வந்திருக்கிறான்" என்று வற்புறுத்தியும் வாமனனது திவ்விய ஸௌந்தரியத்தில் ஈடுபட்டுத் தானம் கொடுக்கவே கொடுப்பேனென்று மஹாபலி சங்கல்பித்துக் கொண்டானென்பது ஆழ்வாருடைய திருவுள்ளம். மஹாபலி மனுநீதியால் போரில் வெற்றி பெற்றுக் கவர்ந்த மூன்றுலோக ராஜ்யத்தைப் பகவான் தன்சுவரூபத்தை அழித்துக் கொண்டேனும் உபேந்திரனாய் நின்று தன்பிராதாவாகிய இந்திரனைக் காப்பாற்றியது அன்பின் பெருக்கினாலன்றோ?

—

கொண்டா னேழ்விடை
உண்டா னேழ்வையம்
தண்டாமஞ் செய்தென்
எண்டா னானே. 7.

தண் தாமம் செய்து - சீதளமான வைகுண்டம் போல் என்னை நினைத்து அந்த ஸ்தானத்தில் செய்யும் அன்பை என்னிடத்தில் செய்து, என் எண் - என்னுடைய எண்ணத்திற்கு அநுரூபமாய்த் தன் திருவுள்ளத்தை, ஆனான்-ஆக்கினான். அதாவது என்னுடன் கலந்த கலப்பு முழுவதும் உண்மையாகத் தீர்ந்தது. பின்னும் எனக்கு உகப்பாகும்பொருட்டு, ஏழுகாளைகளை வசப்படுத்தி நப்பின்னை பிராட்டியை மணந்தான். ஏழு லோகங்களையும் பிரளயகாலத்தில் விழுங்கினான்; தன்வயிற்றில் வைத்து ரக்ஷித்தான்.

—

ஆனா னாயன்
மீனோ டேனமும்
தானா னென்னில்
தானாய சங்கே. 8.

**உரை:**—என்னில் - என் விஷயத்தில், தானாய சங்கே - தனக்குண்டான சங்கத்தாலே (பற்றுதலாலே) ஆனாயன் - கோபாலனாக, ஆனான் - கிருஷ்ணாவதாரஞ் செய்தான். மீனோடு - மச்ச அவதாரம் உள்பட, ஏனமுமாய் - வராஹ அவதாரமுமாய், தானான் - தன் திவ்விய சங்கல்பத்தால் அவதரித்தான். எல்லா அவதாரங்களிலும் சங்குசக்கிரங்களை ஆர்ஜவம்பற்றிக் கைவிடான்.

—

சங்கு சக்கரம்
அங்கையில் கொண்டான்
எங்குந் தானாய
நங்கள் நாதனே. 9.

குறிப்பு:— மேல் பாசுரத்தில் கிருஷ்ணாவதார திவ்விய சேஷ்டைகள் தன் உகப்புக்காக என்று அருளிச்செய்தார். இங்கு எல்லா அவதார விசேஷங்களும் தன் ஸ்வயப்பயன்பொருட்டு என்று தாம் உலகத்தாரோடு ஒன்றுபட்டுப் பேசுகிறமுறையில் அருள் செய்கிறார். சங்குசக்கரங்களைக் கைவிடாதது அந்த இரண்டு நித்தியர்களிடத்திலுள்ள உண்மையான அன்புபற்றி என்கிறார். ஆர்ஜவம் உணர்க.

—

நாதன் ஞாலங்கொள்
பாதன் என்னம்மான்
ஓதம்போல் கிளர்
வேத நீரனே. 10.

பதங்களின் குறிப்புரை:—ஞாலம் - பூமி, ஓதம் போல் - சமுத்திரம் போல், வேத நீரன் - வேதங்களாலே ஓதப்படுகிற ஆச்ரிதரிடத்தில் ஆசை வைப்பவன் முதலான குணங்களையுடையவன்.

"இப்படி எனக்காக அளவிறந்த திரு அவதாரங்களைப் பண்ணினவன் குணங்களை நான் பேசியா முடியும்? சமுத்திரம்போல் ஆரவாரத்துடன் வேதங்கள் அல்லவோ பரக்கப் பேசவேண்டும்.

—

நீர்புரை வண்ணன்
சீர்சட கோபன்
நேர்த லாயிரத்து
ஓர்த லிவையே. 11.

**பதவுரை:**—சடகோபன் - சடகோபனாலே, நேர்தல் - இயற்றப்பட்ட, ஆயிரத்து இவை-இந்தப் பத்துப் பாட்டுக்கள், நீர் புரை வண்ணன் - ஜலம்போல் அதாவ மேகவர்ணனாயிருக்கும் பகவானுடைய, சீர்-பெருமை, இங்கு அநேக பாசுரங்களால் எடுத்துக் காட்டிய ஆர்ஜவகுணம், ஓர்தல் - நன்றாக விசாரிக்கப்பட்டது.

"நெடுமால் அடிமைகொள்ளும் நிலை நாடிய ஓர்ந்து அவன்தன் செம்மை" இத்தசகத்தில் மாறன் "உரை செய்தான்" என்று இப்பத்தை மணவாள மாமுனிகள் சங்கிரஹித்தருளினர்.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[556வது பக்கத் தொடர்ச்சி]

இயல்பிற் கிணங்க வியம்பினா ரிருவரும்.

நல்லாமதிக் காரிகையாமக் கைகேசி தன் உணர்வின் குணத்திற்கிணங்கி வரன்முறை செயிருறத் தரியாளாய் மந்தரையைத் தகைந்த மாற்றம் கம்பரது நூலில் அமைந்தவாறு இவ்வாறாக, முதனூல் முனிவர் இவ்வுரைகளை எவ்வணம் நிகழ்த்துகின்றாரென்பதையும் இங்கு உடன்நிறுத்தி ஒப்புநோக்குதல் வேண்டும். வடநூலின் இப்பாகமவ்வளவும் மொழிபெயர்ப்பதெனின் இடம்மிக விரியுமாதலால் அதன் சுருக்கமே ஈண்டு வரையப்பெற்றிருக்கின்றது:—

கூனி:—"இராமனுக்கு மன்னன் முடிசூட்டுகின்றான். நீ கெட்டொழிந்தனை. நீ மேன்மேலும் க்ஷேமமாய் விளங்கினால்தானே எனக்கும் மேன்மேல் க்ஷேமம்உண்டு. நீ இராஜகுலத்திற்பிறந்து அரசனுக்குப் பட்டமகிஷியாக இருந்தும் இராஜதருமத்தின் கொடுமையை முற்றிலும் உணரவில்லையே. தயரதன் இனிமையாகப் பேசுகின்றானென்று மோசம் போகாதே. அவன் தொழில் கொடியது. அவன் வஞ்சகன். கௌசலைக்கே செல்வத்தைக் கொடுக்கிறான். துஷ்டனான தயரதன், "பரதன் இருந்தால் பட்டாபிஷேகத்திற்கு ஏதாவது இடையூறு உண்டாகலாம்" என்றஞ்சி அவனை மாமன்வீட்டிற்குப் போக்கிவிட்டான். பாம்பை மடியில் வைத்துக் கட்டிக்கொள்வதற்கு நிகராகும் தயரதனைப் பாராட்டுவது. அவன் பெரும்பாவி, பொய்யன். இராமன் அரசனானால் நீயும்கெட்டு உன் புத்திரர் மித்திரர்களும் கெடுவார்கள். ஆகையால் இதுதான் சமயம். காலத்திற்குத்தக்க மதியுடையவளே, உனக்கும் எனக்கும் உன்புத்திரனுக்கும் வேண்டிய நன்மையை இப்பொழுதே தேடிக்கொள்"

கூனியும் கைகேசியும் உரையாடிய தொடரில் முதலாமிது, கம்பரது பெருநூலில், "அணங்குவாள் விடவரா வணுகும் எல்லையும்" என்று துவக்கி, "கோமுடி சூடுவன் நாளை வாழ்விதெனச் சொல்லினாள்" என முடிகின்றவரையிலும் உள்ள செய்யுள் ஆறினில் எடுத்தாளப்பெற்றிருக்கின்றது. வடநூலில் மந்தரை உரைக்கவந்த யாவையும் உயிர்ப்பொன்றில் ஓலமிட்டதுபோ லல்லாமல் கம்பரது நூலில் நாடகத்திறமையோடு உரைக்குரை எதிராகவும் குறிப்புமொழிகளாலும் வழங்கப்பெற்றிருக்கின்றன. அதன் இறுதியில், வேற்றுமை யுற்றிலா ளாதலால் இராமனுக்கு முடிசூடப் போகின்றான் மன்னவன் என்னுமொரு சொல்லையே மனத்திற்கொண்டு கரைகடந்த மகிழ்வெய்தினாள் கைகேசி என்பதில் வான்மீகமும் கம்பர்நூலும் ஒக்குமாயினும், நாடகநிகழ்ச்சிகளை அவ்விரு புலவர்களும் நடத்துகின்ற முறையினிற்கேற்ப சிறிது வேறுபாடும் உளது.

மந்தரை சொல்லியதைக்கேட்டுக் கைகேசி, "சரத்கால சந்திரன்போல் ஆனந்தக் குறிப்போடு தனது முகம்விளங்க, தான் படுத்திருந்த படுக்கையை விட்டெழுந்திருந்து வெகு சந்தோஷத்தைத் தான் அடைந்தபடியால் விலையுயர்ந்த அழகியதோர் ஆபரணத்தை எடுத்து, வெகு ஆனந்தத்தோடு அவளுக்குக் கொடுத்தாள்" என்பர் வான்மீகி முனிவர். இதனைத்தான் அப்படியே மொழிபெயர்த்துக் கம்பர்,

ஆயபே ரன்பெனும் அளக்கர் ஆர்த்தெழத்
தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவ ளுவகை போய்மிகச் சுடர்க்கெலாம்
நாயக மனையதோர் மாலை நல்கினாள்

எனப் பாடினர். இவ்விடத்தில் இத்துணையளவு முதனூலின் உவமையைக்கூட நெருங்கிப் பின்பற்றுகின்ற கம்பர் அதனின்று விலகுகின்றாரெனில் அதற்குத் தக்ககாரணம் இருத்தல்வேண்டும். ஆபரணத்தை அளித்த கைகேசி அதன்மேல், "மந்தரே, நீ இன்று சொன்னசமாசாரம் கேட்க வெகு ஆனந்தமாயிருக்கின்றது. இந்தச் சந்தோஷ சமாசாரத்தைச் சொன்ன உனக்கு நான் என்ன வெகுமதி செய்வேன்? எனக்கு இராமன்என்றும் பரதன்என்றும் வித்தியாசம் ஒருபொழுதுங் கிடையாது. ஆகையால் இராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆகப்போகின்றதென்று வெகு சந்தோஷப்படுகிறேன். இராமனுடைய பட்டாபிஷேகம் என்னும் சமாசாரத்தைவிட உன்னால் சொல்லத்தக்க அதிக சிலாக்கியமான சமாசாரம் வேறொன்றுமில்லை. இவ்வாறு எல்லாவற்றிலும் சிறந்த ஆனந்தமான செய்தியை நீமுதல்முதல்என்னிடம் சொன்னாயாகையால் நீஎன்ன கேட்டாலும் நான் கொடுக்கச்சித்தமாகஇருக்கிறேன். என்னவேண்டுமோ அதைக் கேட்பாய்"எனக்கூறினாளென முதனூல்செப்பும். எல்லாவற்றிலும் சிறந்த செய்தியை அன்று மந்தரை கூறினாளெனக் கைகேசி கொண்டாளென்னுங் குறிப்பை, "சுடர்க்கெலாம் நாயகம் அனையதோர் மாலை" என மாலையின்மீதேற்றிப் பெற்றனர் கம்பர். "இராமனுக்கும் பரதனுக்கும் வேற்றுமை கொண்டிலேன்" என்று கைகேசியையே வான்மீகர் தெரிந்து விளம்பவைத்தது, பாத்திரங்களின் தனித்தனி சிறப்பியற்கைகளுக் கிணங்க நிகழ்த்துகின்ற கம்பரது கொள்கைக்கு ஏற்கவில்லை. இருவருக்கும் வேற்றுமைதான் வைக்கவில்லை என்று அவளே உரைப்பாளாயின்,வேற்றுமை இருத்தல்கூடும் என்னுந்தன்மையை உணர்ந்து பின் அதனைத் தன்அறிவால் மாற்றினவளாயினா ளென்பது வெளிப்படை. கோசலைக்கு அக்குணத்தைக் கொடுத்துக் கைகேசியைஉள்ளத்தின் தூய்மையால்மட்டுமே உயர்ந்தவளாக்கி வைக்குங் கருத்துக் கம்பர்தம் முறைக்கு இன்றியமையாதலால் அவள் "வேற்றுமை யுற்றிலள்" எனக் கவிக்கூற்றாக அமைத்துவிட்டனர் புலவர். இன்னபடி அறிவினா ராய்ச்சி சேராமல் உள்ளமுய்க்கின்ற நன்னெறி தொடர்வதொன்றே இவள்குணம் என்பது,"வெயின் முறைக் குலக்கதிரவன்...." எனத் தொடங்கி, "ஆதி ஆதலின் அறிவிலி அடங்குதி" என்று முடிகின்ற நான்கு செய்யுள்களின் வாசகங்களாலும் நன்குவிளங்கும். வேற்றுமை அற்றவளாயின், இராமனுக்கு முடிசூடுவதால் அவளுக்கு உண்டாய உவகையின் அளவு பரதனுக்கு முடிசூடுவ தென்றாலும் உண்டாக வேண்டுமே. எனின், இராமனுக்கே முடிசூட வேண்டுமெனக் கைகேசி வற்புறுத்துவதற்குக் காரணம் காட்டுவாராய கம்பர், மூத்தோனிருக்க இளையோனுக்கு அரசு தருவது முறையலதென்னும் ஒன்றையே கைகேசி இறுகப் பற்றிக்கொண்டனள் என்பதைச் செவ்விதின் தோற்றுவிக்கின்றனர். தம் மரபு நெறி முறை செயிருறப்படா தென்பதொன்றே அவள் உணர்வின் தூய்மை விழைந்தது. மற்று, இராமன் பரதன் இருவரில் அரசனாவது எவராயினும் ஏனையோர்க்கு அதனால் ஏற்றமேனும் இழிவேனும் விளையும் என்ற எண்ணம் அவள் மனத்தில் புகுந்ததுமில்லை; கூனியின் உரைகள் அவளுக்கு விளங்கவுமில்லை. வழிவழி வந்த குலமரபு என்னும் கோட்டையினுள் தன் தூய்மையைக் காத்துக்கொள்ள முயன்றவளாயினாளன்றி வேறொன்றும் ஆராயப் புகுந்திலள். உளத்தின் தூய்மையை மட்டுமே கைகேசியின் துணையாக அமைக்காமல் அறிவின் ஆராய்ச்சியும் அவளுக்கு அளித்திருக்கின்ற வடமொழிநூலில் அவளது எதிருரையும் வேறுவிதமாக அமைந்திருப்பது




## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### மரகதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும்,பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை. ரூ. 1-8.

### திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

### பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

### ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-9, Old Court House St., Calcutta.

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over Rs. 1,47,000,00

Prompt settlement of Claims. Claims paid exceed Rs. 67,000,00

*IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Oompany to-day.*

R. G. DAS & Co, OR K. S. GOPALAYYA
*Managers.* *Branch Secretary, Loane Square, Broadway, Madras.*

ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK
BY
Mudaliar C. RASANAYAGAM, C. C. S.
With a ForeWord By
Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, *Linguistic, Archeo-logical researches*, is *stated* here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

*MANAGER:—*
*KALANILAYAM,*
*11, VELLALA STREET,*
Purasawalkam, MADRAS.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :— சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப்பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::




# வர்த்தமானம்

**ஸர். குமாரசாமி சாஸ்திரியாருக்கு உபசாரம்:**—ஜட்ஜி பதவியிலிருந்து விலகும் ஸர். C.V. குமாரசாமிசாஸ்திரியாருக்குப் பிரிவு உபசாரம் கூற சென்றவாரம், சீப் ஜட்ஜியின் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் நடைபெற்றது. ஜட்ஜிகள் அனைவரும், வக்கீல்மார் பலரும் இக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். அட்வாகேட் ஜெனரல் ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி ஐயர் பேசியதாவது:—

ஸர். சாஸ்திரியாரின் முன்னோர் பரம்பரையாக வக்கீல் தொழில் செய்தனர். சாஸ்திரியார் சர்வகலாசாலைப் பரிட்சைகளில் உயர்வாகத் தேறிப் பல சன்மானங்கள் பெற்றவர். சாஸ்திரியார் வக்கீல் தொழிலில் காட்டிய சாமர்த்தியங் காரணமாக முதன் முதல் ஸ்மால்காஸ்கோர்ட் ஜட்ஜியாக நியமிக்கப்பெற்றார். பின்னர் 1914-ம் வருஷம் இவர் ஹைகோர்ட் ஜட்ஜியாக நியமனம் பெற்றார். இவர் தமது நீதி வேலையில், மனித சுபாவத்தை ஆழ்ந்து அறிந்து சாட்சியங்களைச் சரியாகப் பகுத்தறிந்து நியாயம் வழங்கும் சாமர்த்தியம் உடையவர். வக்கீல்களிடம் ஆதரவுக்காட்டி வந்தார். இத்தகைய பெரியாரை விட்டுப் பிரிய நேருவது வருத்தம் தருவதாகும். எனினும் இனி அன்னார் ஒய்வு எடுத்துக்கொள்ள வேண்டுவது அவசியமாகும். எனவே அவர் நீடூழி வாழ வேண்டுமென்றும், இந்தியா இதர நாடுகளைப்போல் சம உரிமை பெறுங்காலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நீதிபரிபாலனசபையில் அவர் உதவிபுரிய சந்தர்ப்பம் நேரவேண்டுமென்றும் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

பின்னர் சீப் ஜஸ்டிஸ் பேசியதாவது:—நானும் அட்வகேட் ஜனரலுடன் ஸ்ரீ சாஸ்திரியார் குணாதிசயங்களைப் பாராட்டுகின்றேன். ஜட்ஜிவேலையை மிகத் திறமையுடன் சாஸ்திரியார் செய்துள்ளார். அவர் நீதிமுறை வழுவாதவர் என்று பெயர் எடுத்திருக்கின்றார். அன்னவரைக்கண்டு நானும், மற்ற ஜட்ஜிகளும் வியக்கின்றோம்.

**ஸர்.வி.வி.குமாரசாமிசாஸ்திரியார் அளித்தவிடை:-** நீங்கள் எல்லோரும் புகழ்ந்து பேசியதற்கு எனது வந்தனத்தை அளிக்கின்றேன். நான் எனது வேலை அனைத்திலும் கடவுளை முன்வைத்தே காரியங்களைச் செய்துள்ளேன். வருங்காலத்தில் என்ன நிகழுமென்பதைக் கடவுளே அறிவார்.

நான் சிறுவயதுமுதல் சமஸ்கிருத பாஷையைக் கற்றுத் தேர்ச்சியடைய வேண்டுமெனும் விருப்பமுடையவனாயிருக்கிறேன். ஆனால் பல வேலைகளுக்கிடையில் அது கைகூடாமற்போயிற்று. இனி இந்த எனது ஓய்வுநாளை சமஸ்கிருதப் படிப்பில்செலவழிக்கக் கருதியுள்ளேன். கடவுள் என்னை அவர் திருவடியில் சேர்ப்பித்துக் கொள்ளும்வரை சமஸ்கிருதநூல்களைப் படித்துக்கொண்டிருப்பேன்.

இன்னபடி இவர் பேசியதும் ஆரவாரத்திற்கிடையில் கூட்டம் கலைவுற்றது.


## புதிய தமிழ்ப் புத்தகங்கள்

கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A., M.L., எழுதிய நூல்கள்.

| | ரூ | அ. |
|---|---|---|
| தமிழ் இலக்கிய வரலாறு :— இத்தகையதோர் ஆராய்ச்சி நூல் தமிழுலகிற்குப் புதியதாகும். 550 பக்கம் கலிக்கோ | 2 | 8 |
| தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும் | 1 | 4 |
| திரு. M. S. பூர்ணலிங்கம் பிள்ளை, B.A., L.T., History of Tamil Literature in English | 3 | 8 |
| Critical Studies in Kural | 1 | 8 |
| இன்னிலை மூலமும் உரையும் | 1 | 0 |
| பிரபோத சந்திரோதயம் (செய்யுள்) | 3 | 0 |
| பெரியபுராண ஆராய்ச்சி | 1 | 6 |
| இராமகிருஷ்ணர் விரிவான சரித்திரம் | 5 | 0 |
| வருண சிந்தாமணி (ஆராய்ச்சிநூல்) | 3 | 0 |
| முருகன் புகழ்மாலை (2-ம் பதிப்பு) முருகனைப்பற்றிய நூல்களையும், நூலாசிரியர்களின் வரலாறுகளையு முடையது. உயர்ந்த கட்டிடமுடையது | 3 | 0 |

விரிவான புத்தக விளம்பரக் கேட்லாக் இனாம்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய செந்தமிழ் நூல்கள்

## இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

இஃதொரு சமரச சன்மார்க்க நூல். இராமலிங்க சுவாமிகள் ஷடாந்த சமரச சன்மார்க்கத்தில் நின்று, அருணெறியோம்பி, உயிர்கள் வழிபாடே கடவுள் வழிபாடு என்பதை யுணர்ந்து, சமயவாழ்வு நடாத்திய விதம், அவர் ஆண்டவனை நோக்கிச் செய்த முறையீடு, அமுத அழுகை, அவர் கொண்ட குரு, பொருணூல், வழிபடுகடவுள், அவரடைந்த மரணமிலாப் பெருவாழ்வு, அதற்குரிய முறை முதலியன தெளிவாக இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல் காலத்துக்கேற்ற ஒன்று என்பது, நூலை முற்றும் வாசிப்போர்க்கு இனிது விளங்கும்.

விலை ரூபா 1

189113

| | ரூ. | அ. |
|---|---|---|
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ... | 2 | 8 |
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை ... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் ... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு ... | 1 | 0 |
| சைவத் திறவு ... | 0 | 8 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே ... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் ... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் ... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஏககாலத்தில் வாங்குவோருக்குத் தபாற்செலவின்றி, மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

KALANILAYAM.
REG. NO. M, 2324.


## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும்,பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு | ,, | ,, | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணா | 0 4 0 |

விலாசம் :—'பாரதி' காரியாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும்,அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனம்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!! 60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளைவிட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்த்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## காந்திக்கு ஜேய் !



கதர் சில்க் அங்க வஸ்திரம்.

சுத்த கதர் சில்க். கையினுல் செய்த பட்டு. 5 மு. பட்டு 1-க்கு ரூ. 3-8-0 முந்துங்கள். 500 பட்டுகளே வந்திருப்பதால் உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ஸெண்ட்ரல் ஸ்டோர்ஸ்
373 எஸ்பிளநேடு, சேன்னே.

## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கியிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | ... | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி. பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—" கலா நிலயம் ",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.